இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்



செ.திவான்

இறுதித் திருநபியும்
இயற்கையின் அற்புதங்களும்

வரலாற்றாசிரியர்

செ. திவான், எம்.ஏ,எம்ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்

106 F-4 A, திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை - 627 002.

✆ 572665.

ஆசிரியரின் 41 வது நூல்

முதற்பதிப்பு	:	ஏப்ரல் 2001
உரிமை	:	ஆசிரியருக்கே
விலை ரூ	:	பத்து
அச்சிட்டோர்	:	ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

துஆ செய்ய வேண்டுகிறோம்

திருநெல்வேலி மாவட்டம் - செங்கோட்டை தாலுகா
பூலாங்குடியிருப்பு நாகூர்கனி ராவுத்தர் புதல்வரும்
எனது தாத்தா - பாட்டியுமான

முஹம்மது ராவுத்தர் - ஹசனம்மாள்

ஆகியோர் மறுஉலக நற்பேற்றிற்கும் நல்வாழ்விற்கும்
இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சுஹைனா பதிப்பகம்

எண்ண அலைகள்

அகிலங்கள் அனைத்துக்கும் அருட்கொடையாக வந்த அண்ணல் எம்பெருமான் அஹ்மது முஸ்தபா, முஹம்மது முஸ்தபா. (ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம்) அவர்களின் புனித வாழ்க்கை வரலாற்றினை உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில், வாழும் பல்வேறு மதத்தவர்கள் எழுதியிருக்கிறார்கள்; எழுதிக் கொண்டிருக்கிறார்கள்; எதிர்காலத்தில் எழுதவும் இருக்கிறார்கள். (இன்ஷா அல்லாஹ்) (இறைவன் நாடினால்)

அரபுநாட்டிலே தோன்றி அகிலத்திற்கு அறமுரைத்த அண்ணல் நபி (ஸல்) அவர்களது வாழ்வினில் இயற்கையின் அற்புதங்கள் பல நிகழ்ந்ததை வரலாறுகள் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

1999 ஜனவரியில் 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்' என்னும் ஆய்வுநூலை எழுதி முடித்தவேளை; சென்னை இராமச்சந்திரா மருத்துவ மனையிலே உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டேன். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையால் உயிர் பிழைத்தேன்.

2001 ஜனவரியில் 'ஆரியப்பாதையில் பசுவதை' எனும் அரிய ஆய்வுநூலை எழுதி முடித்து வெளியிட்ட வேளை திருநெல்வேலி கிருஷ்ணா மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டேன். அளவற்ற அருளாளன் அல்லாஹ்வின் கருணையால் திரும்பவும் என்னை நடமாட வைத்துள்ளான்.

சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினரும், மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளரும், பல்லாண்டுகளாக என்னை பாசத்துடன் அரவணைத்து, என்னை வளர்த்து, என் வாழ்வின் பல்வேறு நிலைகளில் எனக்கு பல வழிகளிலும் உதவி, இப்புவியில் நான் நன்றிக்கடன் பட்டுள்ள கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி திருமிகு **வைகோ** எம்.பி., அவர்கள் அடியேன் அவதிக்குள்ளாகும் வேளையெல்லாம் உதவியதனை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

உடல் நலம் பெற சிகிச்சையும், ஓய்வும் எடுத்துக் கொண்டிருந்த வேளையில், இல்லத்தில் அமர்ந்தவாறு இறைவனைப் பற்றியும், இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தேன்.

கி.பி.622இல்அண்ணலார் (ஸல்) வாழ்வில் ஹிஜ்ரத்தின் போது, (மக்காவிலிருந்து மதீனாவிற்கு சென்றது) நடைபெற்ற சம்பவங்களை விரிவாகப் படிக்க நேர்ந்தது.

பலரும் அறிந்த சம்பவம்தான்; ஆனால் அதனை விரிவாகச் சொல்ல எண்ணி, 'இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்' எனும் சிறு நூலாகத் தந்துள்ளேன்.

அண்ணலார் (ஸல்) குறித்து அடியேனும் வாழ்வில் ஓர் சிறுபிரசுரம் வெளியிட வேண்டுமென்ற அவா.

'என்னைப் பற்றி (எல்லோருக்கும்) சொல்லி அறிவியுங்கள்' என்று ஆலநபி அவர்களின் கட்டளையின் பயனாக எவரொருவர் திருநபியவர்களை ஒரு தரம் பார்த்தாரோ அவரும் அன்னாரைப் பற்றி அறிவிப்பவரானார்.

அண்ணலாரின் (ஸல்) கடைசி ஹஜ்ஜின்போது லட்சம் பேருக்கு மேல் கூடியிருந்தனர்; அவர்களில் 13,000 பெரியவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களைத் தெரிந்தவரும், அன்னாரைப் பற்றிப் பிறருக்கு அறிவிக்கக் கூடியவருமாயிருந்தனர். அவர்களது பெயர், வாழ்நாள் விஷயங்கள் முழுவதும் வரலாற்றில் காணக் கிடைக்கிறது.

ஐந்து லட்சம்பேர்

திருநபி அவர்களைப் பற்றி அதிகமாகவோ, அல்லது கொஞ்சமாகவோ தங்களுக்குத் தெரிந்தமட்டில் உலகத்தாருக்குக் கூறிய காரணத்தால் இப்பெரியவர்கள் சரித்திரத்தில் குறிக்கப்படுகிறார்கள்.

இந்த 13,000 கண்கண்ட சாட்சியாளர்களைத் தவிர, நபி(ஸல்) அவர்களைப் பற்றி ஒருவரிடம்கேட்டோ அல்லது கேட்டவரிடம் கேட்டோ அண்ணலாரைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்களை உரைத்த பெரியார்களின் தொகை ஐந்து இலட்சம் ஆகும்.

அஸ்மா உற்ரிஜால்

டாக்டர்ஷ்ப்ரெங்கர் என்ற ஜெர்மானியர் கூறுகிறார் ''முஸ்லிம்களைப் போல் அஸ்மா உற்ரிஜால் என்ற அதி அற்புதமான புத்தகம் உண்டு பண்ணிய கூட்டத்தார் இவ்வுலகத்தில் முற்காலத்திலுமில்லை; இக்காலத்திலும் இல்லை. அப்புத்தகத்தின் மூலமாகத் தற்சமயம் ஐந்து லட்சம் நபர்களின் ஜீவிய சரித்திரத்தை அறிய இடமிருக்கிறது.''★

★ திருநபி அவதார தினக்கொண்டாட்டத்தன்று மௌலானா அப்துல் மஜீத் கர்ஷி அவர்களால் உர்து பாஷையில் வாசிக்கப்பட்ட பத்திரம், மதராஸ் மீலாதே ஷரீபு கமிட்டியார் வேண்டுகோளின்படி S. முகம்மது உஸேன் நயினார் மொழிபெயர்த்த, முகம்மது நபி, நூல் 1929, பக் 8, 9.

முன்னோர்களால் அண்ணல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தெள்ளத் தெளிவாக அகிலத்திற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முக்தபிஸ்

உலகின் பல மொழிகளிலும் அண்ணல் (ஸல்) வரலாறு வெளியிடப்பட்டுள்ளது. 'திமிஷ்க்' பட்டணத்தில் பிரசுரிக்கப்பட்ட (1929), 'முக்தபிஸ்' எனும் பத்திரிக்கையின் மூலமாக இதுவரை (சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்) ஐரோப்பாவில் வழங்குகிற பாஷைகளில் மட்டும் ஏறக்குறைய 2,000 புத்தகங்கள் நபி (ஸல்) அவர்களின் ஜீவிய சரித்திர சம்பந்தமாக எழுதப்பட்டிருக்கின்றன என்ற தகவல் காணப்படுகிறது.

ஜான் டியூன் போர்ட்

''நீதிநெறி வகுத்தோரும், வெற்றி பல கொண்டோரும் ஆகியவர்களில் எவருடைய ஜீவிய சரித்திரமும், முஹம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றினைப் போல விரிவான விஷயங்கள் அடங்கியதாயும், உறுதியான உண்மையுள்ளதாயும் இல்லை என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை'' என்று ஜான் டியூன் போர்ட் குறிப்பிடுகிறார். (அபாலஜி பார் முஹம்மது அண்டு திகுரான்)

பாஸ்வொர்த் ஸ்மித்

அருட்திரு பாஸ்வொர்த் ஸ்மித்(Bosworth smith) பெல்லோ ஆப்ட்ரினிடி காலேஜ், ஆக்ஸ்போர்ட்) தனது 'முஹம்மதும், முஹம்மதிய மார்க்கமும்' என்ற நூலில் ஜொராஸ்டரர்,கன்பூஷியஸ், சோலன், பக்ராத், மூஸா (அலை) ஈஸா (அலை) புத்தர் ஆகிய இவர்களின் ஜீவிய சரித்திரங்கள் தெளிவாய் இல்லாமல் இருப்பதைப் பற்றி வருத்தமும், துக்கமும் கொள்வார். ஆனால் அந்த நூலில் பக்கம் 14, 15,இல் அண்ணலார் (ஸல்) குறித்து அவர் குறிப்பிடும் வாசகங்கள் இதோ...

''... இஸ்லாம் மார்க்கம் தந்த நபியோ! என்னே விந்தை! இவர் வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயமும் வெள்ளிடைமலை போல விளங்குகிறது.

இதில் எந்த விதமான இரகசியமும் கிடையாது. நம்மிடமும் சரித்திரங்கள் இருக்கின்றன...இங்கோ ஒருவர் ஏமாந்து போக முடியாது; பிறரை ஏமாற்றவும் முடியாது. இங்கு ஒரே பகலாயிருக்கிறது. அதன் வெளிச்சம் ஒவ்வொரு பொருளின் மீதும் வீசுகிறது. அப்பிரகாசத்தினின்று ஒன்றும் மறைய இடமில்லை'' என்று வியந்து போற்றுகிறார்.

மார்கோலியத்

இஸ்ஸாம் மார்க்கத்திற்கு விரோதமான எண்ணங்கொண்ட அருட்திரு பேராசிரியர் மார்கோலியத் (REV.G. MARGOLIOUTH) தான் எழுதிய 'முஹம்மது' என்னும் நூலில் துவக்கத்திலே சொல்லுகிறார்.

''முஹம்மது நபியின் சரித்திரம் ஆசிரியர்களுக்கு அந்தமில்லாத நீண்ட சங்கிலியாயிருக்கிறது. ஆனால் அதில் ஓர் இடம் சம்பாதிப்பது மிகவும் கண்ணியமானது என்று பல்லாண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்.''

இஸ்லாம் மார்க்கநெறியினைப் பின்பற்றும் எளியேனுக்கும், எல்லைகாண முடியாத முஹம்மதென்னும் (ஸல்) கடலின் கரையின் விளம்பில் நின்று பார்த்திடத் தணியாத தாகம்.....

எம்பெருமானாரைப் பற்றி எத்தனையோ நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாம் நூல்கள் வெளியிடும் அடிப்படையில் அண்ணல் (ஸல்) பற்றியும் நூல் ஒன்று வெளியாக்க வேண்டும் என்ற ஆவல்...

மௌலானா ரூமி (ரஹ்)

30-9-1207-இல் பிறந்து 1210-இல் தந்தையாருடன் வெளியூருக்குப் புறப்பட்டு 37-வது வயதில் ஞான மார்க்த்தில் பற்றுக் கொண்டவர் (1273-இல் இறையடி சேர்ந்த) மௌலானா ரூமி (ரஹ்) ★

மஸ்னவீ

மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் தனது வாழ்நாளில் மிகப்பெரும் காவியம் ஒன்றை இயற்றினார்கள். 'ஆத்மீகத் துறைக்குக் கலைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் அது 35000 இரண்டடிப் பாக்களைக் கொண்டது. ஞான மார்க்கத்திற்கு ஒளி விளக்காகக் காட்சியளிக்கும் உலகப் பிரசித்தம் வாய்ந்த 'மஸ்னவீ' எனும் நூலில் முதற்புத்தகத்தில், 2046 முதல் 2051 பாடல்களில் அண்ணலாரின் ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிட்டு விட்டு எழுதுகிறார்கள்.

''ஹதீஸ் (நபி மொழி) விளக்கக்காரர்கள் இந்தத் திருமொழியின் புற அர்த்தத்தை சொன்னார்கள்; அத்துடன் திருப்தியடைந்து விட்டார்கள். இவ்வகையானோர் உயிரைப் பற்றிய ஞானமற்றவர்களாவர்; அவர்கள்

★ மௌலவி எஸ். அப்துல் வஹ்ஹாப் பாகவி, மௌலானா ரூமி யின் தத்துவங்கள், சென்னை, 1963, பதிப்புரையில்.

மலையைக் கண்டனர்; ஆனால் மலையினுள் புதைத்திருந்த தங்கச்சுரங்கத்தைக் காணவில்லை'' ★

ஜீவிய சரிதை நூலல்ல

இது நபி பெருமானாருடைய ஜீவிய சரிதை நூலல்ல. எனவே சரித்திர நூல்களில் வருவது போல் சம்பவங்கள் ஓர் ஒழுங்குமுறையுடன் வரவில்லையே, எத்தனையோ சரித்திரச் சம்பவங்கள் கூறப்படவில்லையே என்று யாரும் குறைபட்டுக் கொள்ளக்கூடாது.

அண்ணல் எம்பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்வில் நிகழ்ந்த 'இயற்கையின் அற்புதங்கள்' சிலவற்றை மட்டும் சொல்ல முயல்வதே இச்சிறுநூல்....

அடியேனது வாழ்நாளில் இத்தகைய அரிய சந்தர்ப்பத்தைத் தந்திட்ட எல்லாம் வல்ல இறைவனுக்கு, நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலில் அடைப்புக்குறிகளுக்குள் (ஸல்) என்பதை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்றும், (ரலி) என்பதை ரலியல்லாஹு அன்ஹு என்றும், (ரஹ்) என்பதை ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்றும் முழுவாசகமாகப் படிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் அறிந்த முஸ்லிம்கள் அனைவரின் பார்வையில் இச்சிறுநூல் சென்றடைய எல்லாம் வல்ல ரப்பில் ஆலமீனை இறைஞ்சுகிறேன்.

செ. திவான்

கல்வித்தந்தை
சுலைமான் இல்லம்
சுஹைனா பதிப்பகம்
106 F-4 A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.

★ஆர்.பி.எம்.கனி, கலைமறை முஹம்மது என்னும் காரணம், சென்னை, 1961, முன்னுரையில்.

இறுதித் திருநபியும்
இயற்கையின் அற்புதங்களும்

அல்லாஹ்

அகிலமெல்லாவற்றையும் படைத்துப் பரிபாலிக்கும் உருவமற்றவன் அல்லாஹ்; அவனது திருப்பெயர் திருகுர்ஆனில் பல ஆயிரம் தடவைகள் வருகின்றது.

இறைவனின் மாண்பைப் பற்றிய செய்திகள் 2584 இடங்களில் திருமறையில் வருகிறது. அவையின் வாயிலாக, அல்லாஹ் தன்னுடைய ஆற்றல், அறிவு, எண்ணம், கேள்வி, பார்வை, சொல், செயல் ஆகியவை பற்றி எடுத்துரைத்துள்ளான்.

எவரும் எளிதில் விளக்கிட இயலாத எல்லாம் வல்ல ஆற்றல் கொண்டவன் அல்லாஹ்; அவன் ஒருவன்; அவனே வணங்குதற்குரியவன்; அவனைத் தவிர வேறு நாயனில்லை. அவனுக்கு இணையாக யாருமில்லை.

படைப்புக்கள்

''நான் மறைக்கப்பட்ட புதையலாக இருந்தேன். அதன்பின் நான் அறயப்படவேண்டும் என்று விரும்பினேன். (ஃஅஹ்பப்த்து அன்உஃரஃப்) எனவே படைப்பினங்களைப் படைத்தேன்... என்று ஹதீதுகுத்ஸியில் கூறப்பட்டுள்ளது.

('நான் என்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினேன்' என்று இறைவன் கூறினான் என்றும், தன்னுடைய முழுவெளிப்பாட்டை மனிதன் மூலமே இறைவன் பார்த்தான் என்றும், எனவே மனிதனைப் படைத்தான் என்றும், சூஃபியாக்கள் பொருள் விவரிக்கிறார்கள்; எனவே தான் மனிதனை 'மள்ஹரே அத்தம்மு' (இறைவனின் பரிபூரண வெளிப்பாடு) என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை இன்ஸா னெகாமில் (பரிபூரண மனிதர்) என்றும் குறிப்பிடுகிறார்கள்.)

நபி தாவூத் (அலை)

இறைவனே! நீ எதற்காக படைப்பினங்களை படைத்தாய்? என்று தாவூத் அலை) அவர்கள் கேட்ட கேள்விக்கு அல்லாஹ்வின் பதிலாக மஃரிபி தனது பாடலில்,

''நீ இருப்பது என்னால் வெளிப்பட்டது
நான் இருப்பது உன்னால் உண்டாக்கப்பட்டது

என்னாலே யன்றி நீ வெளியாக்கப் பட்டிருக்கமாட்டாய்

உன்னாலேயன்றி நான் உண்டாக்கப்பட்டிருக்க மாட்டேன்''

என்று கூறுகிறார். ★

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி)

ஹஜ்ரத் ஜாபிர் (ரலி) சொல்கிறார்கள்; முதன் முதலாக சிருஷ்டிக்கப் பட்டது எது? என்று நான் நபி பெருமானாரிடம் கேட்டேன். அதற்கு அண்ணலார், ''முதலாவதாக உமது நபியின் ஒளியை அல்லாஹுஃத்தஆலா தன் ஒளியிலிருந்து சிருஷ்டித்தான்.

அந்த ஒளியைத் தன் சந்நிதியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இருக்கச் செய்தான்.

அதன்பின் அல்லாஹ் சிருஷ்டிகளை வெளியாக்க நாடிய போது, அவன் என் ஒளியை நான்கு பாகங்களாகப் பிரித்தான்.

அப்பேரொளியிருந்து தான் இறைவன் தன் படைப்புக்கள் அத்தனையையும் படைத்தான். எனவேதான், நீர் இல்லையாயின் வானங்களைப் படைத்திரேன், (லவ்லாகலமா ஹலக்துல் அஃப்லாக்) என்ற திருவசனமும் வழங்கி வருகிறது.

அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் ஒளியை நான்கு பாகங்களாகப் பிரித்தான்.

கலம்

அந்த ஒளியின் முதல் பாகத்திலிருந்து கலத்தைப் படைத்தான்.

'கலம்' என்பதன் பொருள் எழுதுகோல் என்பதாகும். இறைவன் விதியை எழுதிய தூரிகைக்கு இப்பெயர் கூறப்படுகிறது.

எழுதுகோல்

'தோற்றுவாய்' துவங்கி, 'மனிதர்கள்' என்று நிறைவுறும் *114* அத்தியாயங்களைக் கொண்ட (ஸூரா) திருகுர்ஆனில் *68*வது அத்தியாயம் கலம் (எழுதுகோல்) ஆகும். திருகுர்ஆனில் *96*வது அத்தியாயத்தில் மூன்றாவது நான்காவது வசனங்களில் இறைவன் கூறுகிறான்.

'நபியே! பின்னும் நீர் ஓதும்: உமதிறைவன் மாபெரும் கொடையாளி; அவன்தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான். ★★ *(அல்லதீ அல்லம பில் கலம் திருகுர் ஆன் 96:4)*

★ அப்துற்-ரஹீம், நபிமார்கள் வரலாறு, முதல் பாகம், சென்னை, *1999*, பக் *9*.

★★ அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி, தர்ஜுமதுல் குர்ஆன், சென்னை, *1986*, பக் *723*.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

இறைவன் எழுதுகோலைப் படைத்து, அதனைப் பார்த்து ''உலக முடிவு நாள் வரை நிற்கக்கூடியவற்றை எழுதுக!'' என்று கூற எதைக் கொண்டு நான் அதை எழுதத் துவங்குவது என்று 'கலம்' கேட்டது; ''பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'' என்று எழுதத் துவங்குவாயாக! என்று இறைவன் கூறினான்.

எழுநூறு ஆண்டுகள்

அதனை எழுதுகோல் எழுநூறு ஆண்டுகளில் எழுதி முடித்தது. ''இதனை முஹம்மதுடைய உம்மத்தில்★ ஒருவர் ஒருமுறை கூறினால் அவருக்கு எழுநூறு ஆண்டு காலம் வணக்கம் நிகழ்த்திய பலனை வழங்குவேன் என்று என்னுடைய மாண்பின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் என்று இயம்பினான்'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்தனர்' என்பர் அப்துற்-ரஹீம்.★★

நிரபராதியாக்குவது

கலமானது இறைவனின் கட்டளையை, ஏற்று 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்பதனை எழுதத் துவங்கியது. அதிலுள்ள 'ப' என்ற எழுத்தை எழுதிய போது, அதிலிருந்து ஒரு பேரொளி கிளம்பியது. அப்பொழுதுகலம் 'இந்த'ப' என்பது என்ன? என்று வினவியது. 'இது முஹம்மதுடைய உம்மத்தை நிரபராதியாக்குவது' என்று கூறினான் இறைவன்.

பின்னர் ஸீனை எழுதுமாறு இறைவன் கட்டளையிட அவ்விதமே கலம் செய்தது; ஸீனுடைய பற்களிலிருந்து பேரொளி அர்ஷின்★★★ பாலும், மற்றொன்று குர்ஸியின் பாலும், பிறிதொன்று சுவனத்தின் பாலும் சென்றன. அவை என்ன என்று கலம் கேட்டது.

இறைநம்பிக்கையில் முந்தியவர்கள்

'இவை முஹம்மதுடைய உம்மத்துக்களில் ஸாபிக்கு (இறை நம்பிக்கை) (ஈமான்) கொள்வதில் முந்திக் கொண்டவர்களின் பேரொளியாகும்.

★ உம்மத்-இனம். சீறாப்புராணம் 16:41

★★ இஸ்லாமியக்கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டு, சென்னை 1977, பக் 569.

★★★ அர்ஷ்-அறுசு- அல்லாஹ்வின் ஆசனம். குர்ஸி-குறுசு- அல்லாஹ்வின் சிம்மாசனம் (பத்றுத்தீன் புலவர், முகியித்தீன் புராணம் 16:14)

குர்ஸியின் பால் பறந்த பேரொளி அதில் நடுத்தரமானவர்களின் பேரொளியாகும். சுவனத்தின்பால் சென்ற பேரொளி அதில் பாவிகளாயுள்ளவர்களின் பேரொளி என்று இறைவன் இயம்பினான்.

இறுதித்தூதர்

பின்னர் 'மீனம்' எழுதும் போது மாபெரும் ஒளி கிளம்ப, அது யாது? எனக் கலம் வினவிற்று 'அது என் இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் பேரொளியாகும். அவரை நான் படைக்கவில்லையாயின் இந்த அண்ட கோளங்களையும் நான் படைக்கப் போவதில்லை' என்றான் இறைவன்.

அண்ணலாருக்கு ஸலாம்

அப்பொழுது எழுதுகோல், அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம்★ உரைக்க அனுமதி வேண்டியது; அவ்வாறே இறைவன் வழங்கினான்.

அவ்விதமே 'கலம்' அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறியபோது இறைவன்; இப்பொழுது அவர் இங்கில்லை; இருந்திருப்பின் அவர் உனக்கு ஸலாம் உரைத்திருப்பார்' எனவே அவருக்குப் பதிலாக நானே உனக்கு ஸலாம் உரைக்கிறேன்' என்று கூறி 'வ அலைக்க மின்னஸ்ஸலாம், யாகலம்' என்று கூறினான்.

இறைவன் இட்ட முத்திரை

பின் 'கலமா'னது அதன்பின் படைத்த லௌஹுல் மஹ்பூல் என்னும் பலகையில் எழுதத் துவங்கி உலகமுடிவு நாள் வரை நிகழக்கூடிய அனைத்தையும் எழுதியது. ஒவ்வொரு படைப்பினங்களுடையவும் இறப்பிற்குரிய தவணை, செயல், உணவு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் இது எழுதி முடித்தது. இதன் பின்னர் இறைவன் இதற்கு முத்திரையிட்டான். அதன் காரணமாக இது பேசவில்லை; உலக முடிவு நாள் வரை கலம் என்ற அந்த எழுதுகோல் பேசாது.

லௌஹுல் மஹ்பூல்

நான்கு பாகங்களாகப் பிரித்த ஒளியில் முதலாவதிலிருந்து கலத்தைப் படைத்த இறைவன், இரண்டாவதிலிருந்து 'லௌஹுல் மஹ்பூலைப்' படைத்தான். இதன் பொருள் 'பாதுகாக்கப்பட்ட பலகை' என்பதாகும்.

★ ஸலாம்-அமைதி-சாந்தி; பெரும்பாலும் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைச் சந்திக்கும்போது முகமன் கூறும் பொருட்டு உம்மீது சாந்தி உண்டாவதாக (அஸ்ஸலாமு அலைக்கும்) என்று கூறுதல் மரபாகும்.

இதில் எழுதப்பட்டுள்ளதை இறைவனையன்றி வேறு எவரும் அறியார். வானவர்களால் பத்திரமாக பாதுகாக்கப்படும்; இதனை 'கிதாபுன் மூபீன்' (தெளிவான பதிவுப் புத்தகம்) என்று இறைவன் தன் திருமறையில் குறிப்பிடுகின்றான். (திருகுர்ஆன் (யாஸீன் 36:12) (80:13-16)

தலைப்பிலே

லௌஹுல் மஹ்பூல் என்றும் அந்தப் பலகையின் தலைப்பில் வணங்குதற்குரியோன் அல்லாஹ் ஒருவனே. முஹம்மது (ஸல்) அவனின் திருத்தூதர். எவர் அவனை விசுவாசித்து, அவனின் தூதரைப் பின்பற்றுகிறாரோ அவர் சுவனம் புகுவார்'' என்று எழுதப்பட்டுள்ளது★

இந்தப் பலகையில் தான் இறைவனின் திருமறைகள் அனைத்தும் பொறிக்கப்பட்டுப், பின்னர் உலகிற்கு பல நபிகள் (இறைத்தூதர்கள்) மூலம் இறக்கி வைக்கப்பட்டது.

அர்ஷ்

பேரொளியின் மூன்றாவதிலிருந்து 'அர்ஷை'ப் படைத்தான். இதன் பொருள் அரியாசனம் என்பதாகும். அண்டகோளங்களையும் சூழ்ந்திருக்கும் இறைவனின் மேலான படைப்பாகிய இது மிகவும் உயரத்தில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இறைவன் இங்கிருந்து தன் ஆணைகளைப் பிறப்பித்ததால் அவனுடைய அரியாசனத்திற்கு உவமையாக இது கூறப்பட்டது.

ஒன்பதாவது வானம்

வான மண்டலங்களின் மிகவும் மேலானதும் பெரியதுமான, அண்ட கோளங்களின் அலுவல்கள் அனைத்தும் இங்கிருந்து புறப்படுகின்ற அண்ட கோளங்களின் அரசாங்கம் 'அர்ஷ்' ஆகும். இதனை ஒன்பதாவது வானம் என்றும் கூறுகின்றனர்.

இதனை மரகத்தினால் இறைவன் படைத்துத் தண்ணீரின் மீது வைத்தான் இறைவன்; அப்போது இது தளும்பிற்று. இதன் மீது இறைவன் 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலில்லாஹி' என்னும் கலிமாவை எழுத இது அமைதியுற்றது. படைப்புகளின் மேல் தளமாகிய இந்த அர்ஷை நான்கு வானவர்கள் சுமந்து கொண்டுள்ளனர். இதற்கு

★ அப்துற்-ரஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, சென்னை, 1979, பக் 82.

380 கால்கள் இருக்கின்றன; ஒரு காலுக்கும் மறுகாலுக்குமிடையில் 500 ஆண்டுத் தொலைதூரமாகும். ★

ஹுகபாயீல்

அர்ஷுக்கு மேலே ஏதாவது இருக்குமா என்று ஹுகபாயீல் என்ற வானவருக்கு ஐயம் ஏற்பட்டது. அவர் தம் 36,000 இறக்கைகளுடன் 50,000 ஆண்டுகள் பறந்த போதிலும் அர்ஷுன் ஒரு தூணின் நுனியை அடைய அவரால் இயலவில்லை. ''எக்காளம் ஊதப்படும் நாள்வரை (உலகம் அழிகிற போது) பறந்த போதினும் நீர் அர்ஷுன் காலை அடைந்து விட இயலாது' என்று இறைவன் அவருக்குக் கூறினான் என்றும் அது கேட்ட அந்த வானவர் இறைவனின் அளப்பெரும் பெருமையை நினைத்துத் துதித்தார் என்றும் கூறப்படுகிறது. ★★

திருமறையில் அர்ஷ்

திருமறையில் நபி யூனுஸ் (அலை) என்னும் அத்தியாயத்தில் மூன்றாவது வசனத்தில் 'அர்ஷின்' மீது தன் ஆட்சியை நிலை நாட்டினான்' (10:3) என்றும் அறிவிக்கப்படுகிறது.

இமாம் மாலிக் (ரஹ்)

இமாம் ஹன்பல் (ரஹ்)

இறைவன் தான் எங்கும் நிறைந்தவனாயிற்றே அவனை ஓரிடத்தில் அமர்ந்தான் என்று கூறுவது சரியா? என்று சிலர் வாதிக்கலாம். இவ்விதம் வாதித்தல் கூடாதென இமாம் மாலிக் (ரஹ்) அவர்களும், இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்களும் கூறியுள்ளனர்.

''குலூபுல் முஃமினீன் அர்ஷுல்லாஹ்'' இறை நம்பிக்கையாளரின் இதயங்கள் அல்லாஹ்வின் அர்ஷாகும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை கவனத்தில் கொள்வோமாக!

நான்காவதை நான்காக

பேரொளியின் நான்காவதை நான்கு பாகங்களாகப் பிரித்து, அதிலிருந்து குர்ஸீ, அமரர்கள், வானங்கள், பூமி, சொர்க்கம், நரகம்

★ அப்துர்-றஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று, சென்னை, 1976, பக் 392.

★★ N.S.N. முஹம்மது அப்துல் காதிர், புரவலர் போர்த்திய பொன்னாடை, சென்னை 1990, பக் 789.

ஆகியவற்றை இறைவன் உண்டாக்கினான் என்று ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அண்ணலார் (ஸல்) சொல்லியதாக அறிவிக்கிறார்கள்.★

குர்ஸீ

ஆசனம், நாற்காலி என்று பொருள்படும் சொல் குர்ஸீ 'இறைவன் ஏழு வானங்களைப் படைத்துள்ளான். முதலாவது வானம் இறை நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும்.

இரண்டாவது வானம் வணக்கவாளர்களின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். மூன்றாவது வானம் துறவிகளின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். நான்காவது வானம் ஞானிகளின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். ஐந்தாவது, ஆறாவது வானங்கள் நபிமார்களின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். ஏழாவது வானம் ரசூல் மார்களின்★★ ஆன்மாக்கள் தங்குமிடமாகும். இதற்கு மேலுள்ள எட்டாவது வானத்துக்குத் தான் குர்ஸு என்று பெயராகும்.

உலுல் அஸ்ம்

நபிநூஹு (அலை)

நபி இப்ராஹீம் (அலை)

நபி மூஸா (அலை)

நபி ஈஸா (அலை)

நபி முஹம்மது (ஸல்) ஆகிய ஐவரும் உலுல் அஸ்ம் (துணிந்தவர்கள்) என்று அழைக்கப்படுபவர்கள். (வேறு சிலர், நபிமார்கள் அனைவரும் உலுல் அஸ்ம் என்றும் கூறுகிறார்கள்)

எட்டாவது வானத்தில் தான் உலுல் அஸ்மான நபிமார்களின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். (இதற்கு மேலே தான் ஒன்பதாவது வானத்தில் அர்ஷ் இருக்கிறது என்பதனை முன்னரே பார்த்தோம்.)

குர்ஸீயுடைய ஒரு தூண் ஏழு வானங்களுடையவும், ஒரு தூண் ஏழு பூமிகளுடையவும் உயரம் இருக்கும் என்றும் இதனை நான்கு வானவர்கள் சுமந்து கொண்டிருப்பர் என்றும் கூறப்படுகிறது.

''கானகத்தின் நடுவே கிடக்கும் ஒரு வளையம் அக்கானகத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது அற்பமானதாகி விடுவது போன்று ஏழு

★ இமாம் பை ஹக்கியின் தலாயிலுந் நுபுவ்வத்

★★ இலட்சக்கணக்கான நபிமார்களில் 313 நபிமார்கள் றசூல்மார்கள் என்று கூறப்படுகிறது.

வானங்களும், ஏழு பூமிகளும் குர்ஸியுடன் ஒப்பு நோக்கப்படும் போது அற்பமாகி விடுகின்றன' என்று அண்ணல் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் ஒளி

''நான் அல்லாஹ்வின் ஒளியி(நூர்)லிருந்து வெளிப்பட்டவன்; சிருஷ்டிகள் யாவும் என் ஒளியிலிருந்தே வெளியாயின; அல்லாஹ் முதலில் என் ஒளியை (நூரை)யே சிருஷ்டித்தான் என்று அண்ணலார் (ஸல்) அறிவித்துள்ளார்கள்.

ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரஹ்)

''அல்லாஹுத் தஆலா தன் சாத்துவீகச் சுடரொளி (நூரே-ஜமால்) யிலிருந்து முஹம்மதுஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஜீவனை உண்டாக்கினான் என்று, ஹஸ்ரத் கௌதுல் அஃலம் தனது ஸிர்ருல் அஸ்ராரில்' குறிப்பிட்டுள்ளார்கள்.

காஜா முயினுத்தீன் சிஷ்தி (ரஹ்)

''அல்லாஹுத்த ஆலா ஆதியில் தான் தானே தனித்திருந்தான். பிறகு தன் நூரிலிருந்து வேறொரு நூரைச் சிருஷ்டித்தான்... நூரிலிருந்து நுரெ-முஹம்மதீயைத் தனியாக்கித் தன் நாட்டத்தால் சகல சிருஷ்டிகளையும் சமைத்தான்'' என்று காஜா முயினுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் (தலாயிலுல் ஆரிபீன்) அறிவித்துள்ளார்கள்.

ஷைகுல் அக்பர் இப்னுல் அரபி (ரஹ்) அவர்கள் தமது அரபி நூலான 'புத்தூஹாத்துல் மக்கியாவிலும்', அப்துல்கரீம் ஜீலி (ரஹ்) இன்ஸானுல் காமீல்' எனும் அரபி நூலிலும், மௌலவி அப்துல் ஹக் தெஹ்லவீயின் 'மதாரீ ஜானெநுபுவ்வத்' அரபி கிரந்தத்திலும் இதே கருத்துக்கள் கூறப்படுகின்றன.

நபி ஆதம் (அலை)

உலகின் முதல் மனிதராக, நபியாக ஆதம் (அலை) அவர்களை இறைவன் படைத்தான். ஆனால் ஆதம் (அலை) மண்ணுக்கும் நீருக்கும் நடுவில் இருந்த பொழுது நான் நபியாக இருந்தேன்'' (அன நபிய்யுன் வஆதமு பைனல் மாஇவத்தீன்' என்று நபிகள் நாயகம் (ஸல்) தம்மைப் பற்றிக் கூறியுள்ளார்கள்.

எனவேதான் விண்ணேற்றத்தின் போது ஆதம் (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை வரவேற்ற பொழுது உடற்பிறப்பால் என் மகனாகவும், ஆன்மிகப் பிறப்பால் என் தந்தையாகவும் உள்ள தங்களுக்கு சுபசோபனம்' என்று நன்மாராயம் மொழிந்தார்கள்.

உலகிற்கு வந்த இறுதி நபி

''நான் எல்லா நபிமார்களுக்கு முன்பாக நபியாகவும், ஆனால் உலகிற்கு வந்த நபிமார்களில் இறுதியாகவும் உள்ளேன்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அர்ஷில் அண்ணலார் பெயர்

இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்; அவர்கள் தவறிழைத்தார்கள். அந்த விவரம் அனைவரும் அறிந்ததே. அதற்காக அவர்கள் சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு அனுப்பப்பட்டபோது, இறைவனிடம் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஒருமுறை வானத்தின் பக்கமாக முகத்தை உயர்த்தி யா அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களுடைய பொருட்டால் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்று துஆச் செய்தார்கள். முஹம்மது (ஸல்) என்பவர் யார்? அவருடைய பொருட்டால் மன்னிப்புக் கேட்கக் காரணம் என்ன? என்று இறைவன் வஹி ★ அறிவித்தான்.

''என்னைப் படைத்த போது, நான் உனது அர்ஷைப் பார்த்தேன். அங்கு 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸுலுல்லாஹி' என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். உனது திருநாமத்துடன் இணைந்து எழுதும் பாக்கியம் பெற்ற முஹம்மது (ஸல்) அவர்களை விட உயர்வான படைப்பு வேறு யாரும் இருக்க முடியாது என உணர்ந்தேன்' என்று ஆதம் (அலை) தெரிவித்தார்கள்.

அவரே காத்தமுந் நபியாகும்; (இறுதி நபியாகும்) அவர் உம்முடைய சந்ததியிலிருந்தே தோன்றுவார். ஆனால் அவரை நான் படைக்கா விட்டால், உம்மையும் நான் படைத்திருக்க மாட்டேன்' என்று அல்லாஹ் வஹி அருளினான் என்பதாக பெருமானார்(ஸல்) அவர்கள் திருவுளமானார்கள் என்று பைஹக்கீ' சான்று தருகிறது★★

சீறாப்புராணத்தில் உமறுப்புலவர், விலாதத்துக்காண்டம், தலைமுறைப் படலத்தில் 12-வது பாடலில் பாடியுள்ளார்.

★ வஹி - வகி - இறைஅறிவிப்பு

★★ ஹலரத் மௌலானா மௌலவி முஹம்மது ஜக்கரிய்யா ஸாஹிப்

''கலைமறை முகம்மதென்னுங் காரணமில்லையாகில்
உலகு, விண், இரவி, ★ திங்கள் ஒளிர் உடுக்கணம், ★★ சுவர்க்கம்,
மலை கடல் நதி, பாதாளம் வானவர் முதலாய் உம்மை
நிலையுறப் படைப்பதில்லை என இறை நிகழ்த்தினானே!''

நபி (ஸல்) தோழர்களில் முதன்மையரான அபூபக்கர் சித்தீக்(ரலி) வங்கிஷ வழியாக வந்த காயறப்பட்டினம் பெரிய நூகு லெப்பை ஆலிம் சாகிப் இயற்றிய வேதபுராணத்தில், கலிமா முதலிய காரணப் படலத்தில் நான்காவதாக வரும் *'நாமங்கொண்டு அறுஷூம், குறுஷூம்'*, எனத்துவங்கும் பாடலில், *'ஏமம் ஏழுவகை தோற்றமெல்லாம் இரசூல் நபியைக் கொண்டு ஆனதுவே'* என்றும் இது குறித்துப் பாடியுள்ளார்கள். ★★★

நபி (ஸல்) தலை முறை விபரம்

நபி ஆதம் (அலை) நபி சீது (அலை) அனுஷ் கைனன், பர்த், மஹலீல், உக்னுக் நபி இத்ரீஸ் (அலை), முத உசலக், லமக் நபி நூமஹ் (அலை), 11.சாஅம், 12.அர்பக்ஷத், 13.அமீர், ஷாலிக், பாலிக், ரயூ, ஷரூஹ், நஹூ, தாருக், நபி இப்ராஹீம் (அலை), நபி இஸ்மாயில் (அலை), கைதர், சபீத், யஷ்ஹப், யாஅரப், யர்ஜ், நகர், முகவிம், 30.உவத், உஅத், அத்னான், மஆது, நஜாஅர், முஜர், இலைஸ், முத்ரிகா, குஸைமா, கினானா, நஜர், மாலிக், பெஹ்ர், காலிப், லுவை காஅப், முர்ரா, கெலப், குஸை, அப்து மனாப், ஹாஷிம், அப்துல் முத்தலிப், அப்துல்லாஹ், ஆமினா, முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் ★★★★

11, 12, 13 முதல் 30 வரையுள்ள எண்களும் குறிப்பிடுபவர்களின் பெயரில் சரித்திர ஆசிரியர்களுக்கு ஐயமுண்டு என்பர் ஆர்.பி.எம். கனி ★★★★★

அண்ணலாரின் அவதாரம்

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை)க்கு 571 ஆண்டுகளுக்குப் பின்னும், ஹஸ்ரத் மூஸா (நபி)க்கு 2300 ஆண்டுகளுக்குப் பின்னும், ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை)க்கு 3070 ஆண்டுகளுக்குப் பின்னும், ஹஸ்ரத்

★ இரவி-சூரியன்

★★ ஒளிர் உடுக்கணம்-மின்னுவதான நட்சத்திரங்கள்.

★★★ ஹிஜ்ரி 1312-ஆம் ஆண்டு பதிப்பு, வேதபுராணம், பக் 3.

★★★★ திக்ரின் சிறப்புகள் (இரண்டாவது பாகம்) அதிராம்பட்டினம்-பக் 216.

★★★★★ கலை மறை முஹம்மது என்னும் காரணம், பக் 25, 26.

நூஹு (அலை) நபியின் கால ஜலப் பிரளயத்துக்கு 4490 ஆண்டுகளுக்குப் பின்னும், ஹஜ்ரத் ஆதம் (அலை) நபிக்கு 6750 ஆண்டுகளுக்குப் பின்னும், கி.பி. 571 ஏப்ரல் 20ஆம் நாளன்று திங்கட்கிழமையன்று கிழக்கு வெளுக்கும் நேரத்தில் (ரபீயுல் அவ்வல் 9) இப்புவியில் அண்ணலார் (ஸல்) அவதரித்தார்கள். (அன்றைய தினத்தில் சூரியனில் மாறுதல்கள் ஏற்பட்டன என்று பேராசிரியர் சிஜேயிஸ்கி என்பவர் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆராய்ந்து கூறியுள்ளார்.)

அண்ணலாரின் (ஸல்) அழகிய பெயர்கள்

முஹம்மத், அஹ்மத் ஹாமித், மஹ்மூத், காஸிம், ஆQகிப், Fபாதிஹ், காத்திம், ஹாஷிர், மாஹின், தாஇன், ஸிராஜ் ரஷீத், முனீர், பஷீர், நதீர், ஹாதின் மஹ்தின், ரஸூல், நBபிய்யுன், தாஹா, யாஜீன், முZஜ்Zஜம்மில், முத்தஸ்ஸிர், ஷபீஃ, கலீல், கலீம், ஹபீப், முஸ்தபா, முர்தழா, முஜ்தபா, முக்தார், நாஸிர், மன்சூர், ஹாசிம், ஹாபிழ், ஷஹீத், ஆதில் ஹகீம், நூர், ஹுஜ்ஜத், புர்ஹான், அப்தஹிய்யி, மூஃமின், முதீஃ, முதக்கிர் வாஇழ், அமீன், ஸாதிக், முஸத்திக், நாதிக், ஸாஹிப், மக்கிய்யி, மதனிய்யி அரபிய்யி, ஹாஷிமிய்யி, திஹாமிய்யி, ஹிஜாZஜிய்யி, நிஜாரிய்யி, குரைஷிய்யி, முழரிய்யி, உம்மிய்யி, அZஜீZஜ், ஹரீஸ், ரஊFப், ரஹீம், யத்தீம், நுனிய்யி, ஜவ்வாத், Fபத்தாஹ், ஆலிம், தய்யிப், தாஹிர், முதொஹ்ஹிர், கதீப், Fபஸீஹ், ஸய்யித், முத்தகீ, இமாம், பார்ருன், ஷாFபின், முதவஸ்ஸிதுன், ஸாபிக், முக்தஸிக், மஹ்திய்யி, ஹக்குன் முபீன், அவ்வல், ஆகிர், ளாஹிர், பாதின், ரஹ்மத், முஹல்லில், முஹர்ரிம், ஆமிர், நாஹின், ஷகூர்கரீம், முனீப், மு பல்லிஃ, தாஸின், ஹாமீம், அவ்லா, ஆஃலா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகிய 104 அழகிய பெயர்கள் அண்ணலாருக்கு உண்டு என்பர் M.A. ஷைகுஹுஸைன் பாகவீ★

கர்பத்திலேயே அற்புதம்

அண்ணலார் (ஸல்) ஆமீனா அம்மையாரின் திருவயிற்றில் இருந்தபோதே அற்புதங்கள் பல நிகழ்ந்தன.

ஆமீனாத் தாயார் கருவுற்ற முதல் மாதத்தில் ஆதம் (அலை) கனவில் தோன்றி நன்மாராயம் கூறி, ஆற்றல் மிக்க அப்பிள்ளைக்கு முஹம்மது (ஸல்) எனப் பெயரிடுங்கள் என்று உரைத்தேகினார்கள்.

★ அஸ்மா உல் ஹுஸ்னாவின் அற்புத பலன்கள், சென்னை 1994, பக். 32.

இரண்டாம் மாதத்தில் இத்ரீஸ் (அலை) ஆமீனாத் தாயார் கனவில் தோன்றி, உங்கள் வயிற்று குழந்தை மிக்க வலிமையுடையது அதன் பெயர் முஹம்மது(ஸல்) என்று மகிழ்வுடன் உரைத் தேகினார்கள்.

மூன்றாம் மாதத்தில் நூஹ் (அலை) அவ்வாறே கனவில் தோன்றி, மிக அதிக அளவில் அரிய உண்மைகளை உரைப்பவர்களாகவும், நிலையான வெற்றியாளராகவும் விளங்கிடவுள்ள முஹம்மது எனும் பெயர் துலங்கிடும் மகவைக் கருவுற்றுள்ளீர்கள் என உரைத்தேகினார்கள்.

நான்காம் மாதத்தில் இபுறாஹீம் (அலை) ஆமீனாத் தாயார் கனவில் தோன்றி உங்கள் வயிற்றிலுள்ள பிள்ளை முஹம்மது(ஸல்) மிகு சிறப்பிற்குரியது எனக் கூறினார்கள்.

ஐந்தாம் மாதத்தில் நபி இஸ்மாயில் (அலை) ஆமீனாத் தாயார் கனவிலே தோன்றி பிறக்க இருக்கும் பிள்ளையின் சிறப்பியல்புகளை செப்பினார்கள்.

ஆறாவது மாதத்தில் நபி மூஸா (அலை) ஆமீனாத் தாயார் கனவிலே தோன்றி பிறந்திடவுள்ள பிள்ளையின் திறம், நலம் மேம்பாடு பெயர் ஆகியவற்றை உரைத்து நன்மாராயம் வழங்கினார்கள்.

கருவுற்ற ஏழாவது மாதத்தில் ஆமீனாத் தாயாரின் கனவில் தாவூது (அலை) தோன்றி உங்கள் பிள்ளை ஆண்டவனிடத்தே மானிடரின் பாபம் பொறுத்திடுமாறு மன்றாடிடக் கூடிய பிள்ளை என்று கூறிச் சென்றார்கள்.

எட்டாவது மாதத்தில் சுலைமான் (அலை) ஆமீனாத் தாயாரின் கனவிலே தோன்றி, உங்கள் வயிற்றில் உள்ள குழந்தை 'அதுனான்' எனும் கோத்திரப் பிரிவில் பிறந்திடும் வெகு புகழிற்குரிய பிள்ளையாகும் என்று சொல்லிச் சென்றார்கள்.

ஒன்பதாம் மாதத்தில் நபி ஈஸா (அலை) ஆமீனாத் தாயார் கனவிலே தோன்றி, உங்கள் வயிற்றில் உள்ள பிள்ளை நல்ல வேதத்திற்குரியவர் என்று உரைத்துப் போனார்கள். இவைகளை சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம் நபியவதாரப் படலத்தில் உமறுப்புலவர் பாடியுள்ளார்.★

பிறப்பின் அற்புதம்

இமாம் காழி இயால், மேதை இப்னுருஷ்து, அல்லாமா தல்ஸாமானி ஆகியோர் அறிவித்துள்ளபடியும், நிஹாயதுல் அமல், ஹீப்னீ; தைரபீ ஆகிய நூல்களிலிருந்தும் வள்ளல் நபி (ஸல்) அவர்கள் வெளிவந்தவழி

★ கா.மு.ஷெரீப்; சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம் மூலமும் உரையும், முதற்பாகம், சென்னை, 1992 பக் 260-292.

வழமைக்கு மாறாக, தாயார் ஆமீனா (ரலி) அவர்களின் நீர் தாரைக்கு மேலும், தொப்புளுக்கு கீழுமான இடது விலா இடுப்பு பாகமிருந்து பிறந்தார்கள். பிறந்து வந்த பாதையும் உடனே மேவி சீராகி விட்டது; அண்ணலார் (ஸல்) பிறப்பின் அற்புதம் இதுவாகும்.

பிறக்கும் பொழுது பெருமானார் (ஸல்)

பிறக்கும் பொழுதே எம்பிரான் (ஸல்) விருத்த சேதனம் (கத்னா) செய்யப்பட்டவர்களாகவும், தொப்புள் அறுக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். உடல் மிகவும் தூய்மையாகவும் இருந்தது; எவ்விதமான அசுத்தம் அவர்களுடைய உடலில் இருந்ததில்லை.

பெருமானார் (ஸல்) பிறந்த பிறகு அவர்களுடைய நெற்றி பூமியின்மீது வைத்து ஸஜ்தா (இறைவனுக்குச் சிரவணக்கம் செய்யும்) நிலையில் காணப்பட்டார்கள்.

கலிமா (ஆள்காட்டி) விரலை வானத்தை நோக்கி மேல்பக்கம் காட்டியவர்களாகவும் இருந்தார்கள்.

ஷிமாயில் திர்மதீ

அபூஈஸா முஹம்மது இப்னு ஸவ்ரா என்பவர் 'திர்மிது' என்ற ஊரில், பிறவிக் குருடராகப் பிறந்து (ஹிஜ்ரீ 209) வாலிபப் பருவத்தில் கல்வி கற்று ஹதீதுக் கலையில் மாபெரும் நிபுணராகப் பெயரெடுத்தவர்; (ஹிஜ்ரீ 207-இல் மறைந்தார்)இவரது ஊரின் பெயராலேயே திர்மீதி என்று (திர்மிதுவாசி) அழைக்கப்பட்டவர்.

திர்மிதுவாசியான அபூஈஸா அவர்களால், தொகுக்கப்பட்ட எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அங்க அடையாளங்களையும் நடையுடை பாவனைகளையும் விளக்கும் ஹதீதுத் திரட்டின் மூலம், அண்ணல் (ஸல்) அவர்களின் தலைப்பாகை முதல் மிதியடி வரையிலான விவரங்களை நாம் அறிந்து கொள்ளலாம். ★

அண்ணலாரிடம் (ஸல்) அமைந்திருந்த அற்புதங்கள்
பார்வையில் அற்புதம்

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் முன்புறமுள்ளதை எவ்வாறு பார்ப்பார்களோ, அவ்வாறே தங்கள் முதுகுக்குப்பின் உள்ளவற்றையும்

★ உத்தம பாளையம் மௌலவி P.S.K. முஹம்மது இப்ராஹீம் மொழி பெயர்த்த ஷமாயில் திர்மதீ, (1960) 291 பக்கங்களைக் கொண்ட அந்த நூலைப் படித்தறியலாம்.

பார்ப்பார்கள். பகலிலும் ஒளியிலும் எவ்வாறு பொருட்களையும் பிறவற்றையும் பார்ப்பார்களோ அவ்வாறே இரவிலும் இருளிலும் அவர்களால் அவற்றைப் பார்க்க முடிந்தது. (நூல் புகாரி, மிர்காத், கஸாயிஸ்)

உமிழ்நீர் அற்புதம்

நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் உமிழ்நீர் உப்புத்தண்ணீரில் விழுந்து விட்டால் அது குடி தண்ணீராக மாறிவிடும். இவ் அற்புதங்கள் நிகழ்ந்த கிணறுகள் மதினா நகரத்தில் அநேகம் இருக்கின்றன. அண்ணலார் (ஸல்) அவர்களின் உமிழ்நீர் பால் குடிக்கும் குழந்தைகளின் வாயில் ஒரு சொட்டு விட்டு விட்டால் அந்தக் குழந்தைக்கு அந்தப்பகல் முழுவதும் பால் தேவைப்படாது. அனீஸுல் முஷ்தாக்கீன் இலாஹயாத்தி ஸையிதுல் முர்ஸலீன் என்னும் நூலின் பெருமைக்குரிய ஆசிரியர் இதுபற்றி விளக்கியிருக்கிறார்கள்.

செவிகளில் அற்புதம்

செம்மல் நபி (ஸல்) அவர்களின் செவிகள் வெகுதூரத்திலிருந்து வரும் ஒலிகளை செவியேற்கும் நிகரற்ற திறமை பெற்றவைகள் ஆகும். 'உங்கள் காதுகளால் கேட்க முடியாதவைகளையெல்லாம் நான் கேட்கிறேன்', என்று அண்ணல் (ஸல்) அறிவித்ததை அபூதர் (ரலி) அறிவிக்கிறார்கள். (நூல் : திர்மதி, கஸாயிஸ குப்ரா) மண்ணறையிலிருந்து எழும் குரல்களை நபி (ஸல்) அவர்கள் தங்களின் செவிகளால் கேட்டதை ஸைத் பின் தாவித் (ரலி) அறிவித்துள்ளார்கள். (நூல் : முஸ்லிம், மிஷ்காத், மிற்காத்)

நுபுவ்வத்தின் முத்திரை

நபித்துவத்தின் முத்திரை முத்து முஹம்மது (ஸல்) அவர்கள் முதுகில் இருந்தது. (நூல் : முஸ்லிம் ஷரீப்)

மூன்று முறை பொருத்தப்பட்ட உள்ளம்

செவிலித்தாய் ஹலீமா ஸஃதிய்யா (ரலி) வள்ளல் நபி (ஸல்) அவர்களை வளர்த்து வரும்போது நான்காவது வயதிலும், நபி (ஸல்) அவர்களுக்கு நாற்பதாவது வயதில் நுபுவ்வத் கொடுக்கப்பட்ட போதும் , விண்ணுலக யாத்திரை மேற்கொண்டபோதும் அண்ணலாரின் (ஸல்)உள்ளம் (கல்பு) கழட்டி திரும்பப் பொருத்தப் பட்டிருக்கிற அற்புதத்தை அறிகிறோம்.

உள்ளம் உறங்கா உயர் அற்புதம்

பெருமானாரவர்களின் (ஸல்) நித்திரையில் அவர்களது உள்ளம் உறங்காது; அல்லாஹ்வின் தியானத்தைப் புறக்கணிக்காது, கண்மூடி

இருந்த நிலையிலும், இறைவன் துதியில் இருப்பார்கள். 'நிச்சயமாக என்னுடைய இரு கண்கள் மட்டும் தான் உறங்கும் எனது உள்ளம் உறங்காது' என அண்ணல் (ஸல்) அவர்களே அறிவித்துள்ளார்கள். (நூல் : புகாரீ)

நாவின் அற்புதம்

அண்ணல் (ஸல்) யாரிடமும் ஓர் வார்த்தையும் படித்தறியாதவர்; ஓர் எழுத்தும் எழுதத் தெரியாதவர். இப்படிப்பட்ட அண்ணல்(ஸல்) அவர்களின் உரை, இனிமையாகவும் தத்துவங்கள் நிறைந்ததாகவும் இருக்கும். பெருமானாரவர்களின் குரல் வெகுதூரம் வரையிலும் கேட்கும். அக்காலத்திலுள்ளவர்களின் குரல் பெருமானாரவர்களுடைய குரலில் பத்தில் ஒரு பாக தூரம் கூட செல்லாது.

கொட்டாவி விடாத கோமான் நபி (ஸல்)

நபிகள் நாயகம் (ஸல்) தங்கள் ஆயுள் முழுவதிலும் என்றைக்கும் கொட்டாவி விட்டதே கிடையாது; அவர்கள் கொட்டாவி விட்டதை ஆயுள் முழுமையிலும் எவரேனும் பார்க்கவே இல்லை.

பெருமானாரவர்களுக்கு (ஸல்) ஆயுள் முழுவதும் இந்திரியஸ்கலிதம் ஆனதும் இல்லை; வியர்வையில் கஸ்தூரியை விட அதிக வாசனை இருந்தது.

பெருமானாரவர்களின் மல ஜலத்தை பூமியின் மீது எவரும் பார்த்ததில்லை. ஏனென்றால் பூமி பிளந்து அதற்குள் மறைந்து விடும் என்று கருதப்படுகிறது. (அன்வாரே முஹம்மதிய்யா) (கஸாயிஸுல் குப்ரா)

மேகம் குடை பிடிக்கும்

பெருமானார் (ஸல்) வெயிலில் நடந்து போகும் போது மேகத்தின் ஒரு சிறு பகுதி அவர்கள் மீது வந்து நின்று நிழல் தரும்.

நாயகமவர்கள் (ஸல்) ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்தால், மரத்தின் நிழலும் பெருமானார் எந்தப் பக்கத்தில் இருப்பார்களோ அந்தப் பக்கம் தான் இருக்கும். பெருமானாரின் (ஸல்) உடலுக்கு நிழல் இருந்ததில்லை. அவர்களுடைய நிழல் பூமியில் பட்டதையும், அது நகர்ந்ததையும் ஒருவரேனும் கண்ணால் கண்டதில்லை. ★ பெருமானாரவர்களின் உடலுக்கு நிழலே இல்லை.

அல்-அமீன்-அஸ்ஸாதிக்

அல்அமீன் (நம்பிக்கைக்குரியவர்) அஸ்ஸாதிக் (உண்மையாளர்) என்று சிறுவயதிலே புகழப்பட்டவர் அண்ணலார். முஹம்மத் என்ற சொல்லுக்கே புகழப்பட்டவர் என்பது பொருளாகும்.

★ ஸையத் இப்ராஹீம் ,ரஸூல்லாஹ் (ஸல்) சிறப்பு, தென்னூர், 1969, பக் 7, 9.

அன்னை கதீஜா (ரலி)

அருமைப் பெருமானார் (ஸல்) அவர்களின் முதல் மனைவி அம்மையார் கதீஜா (ரலி) ஆவார்; இவர் ஹஜ்ரத் பாத்திமா நாயகியின் அன்னை. இமாம் ஹஸன் (ரலி), அமாம் ஹுஸைன் (ரலி) ஆகியோரின் பாட்டி.

குவைலித்-பாத்திமா தம்பதியருக்குப் பிறந்தவர் உம்முல் முஃமினீன் ஹஜ்ரத் கதீஜா நாயகி (ரலி). முதலில் அபூஹாலா அவர்களையும், அதீக் இப்னு ஆயித் அவர்களை இரண்டாவதாகவும் இவர்கள் மணந்தார்கள் என்று இஸ்தி ஆப் என்னும் சரித்திராசிரியர் உறுதிப்படுத்துகிறார்.★

அபூபக்கர் கொடுத்த ஆடைகள்

''நாளைக்கு என் திருமணம் நடக்கப் போகின்றது. ஆனால் இப்பொழுது என்னிடமுள்ள ஆடைகள் கதீஜாவின் வீட்டில் போய் உட்காருவதற்கு ஏற்றவையல்ல'' என்று அண்ணலார் (ஸல்) கூறிய போது, ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) கொடுத்த ஆடைகளையே அணிந்து கொண்டு பெருமானார் கதீஜா (ரலி) வீட்டிற்குச் சென்றார்கள். அண்ணலார்(ஸல்) அவர்களுக்கும், அன்னை கதீஜா நாயகி(ரலி)க்கும் திருமணம் நடந்தது. 20 ஒட்டகங்கள் மஹராக (திருமணத்தின் போது மணமகன் கட்டாயமாக மணமகளுக்கு செலுத்த வேண்டிய பணம்)★★ பெருமானாரின் திருமணத்தில் கொடுக்கப்பட்டது. ஐநூறு திர்ஹம் வெள்ளி நாணயங்கள் கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதன் பின்னர் கி.பி. 610 ஆகஸ்ட் 22, 23இல் ஹிராமலையில் வானவர் தூதுவரைச் சந்தித்தது, 'ஓதுக' என்னும் திருவசனத்தை அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு ஓதக் கற்றுக் கொடுத்தது; வரக்கா இப்னு நெவிரம்பல் எனும் முதுகிழவர் அதுஅறிந்து உலக மகாநபி என்று அண்ணலார் (ஸல்) அவர்களிடம் உரைத்தது; தூய்மையுள்ளவர் (தாஹிரா) என்று போற்றப்படும் அன்னை கதீஜா (ரலி) அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தினை முதன் முதலில் ஏற்றது ஆகியவை விரிவான சரித்திரங்களாகும்.

அபூபக்ர்(ரலி)

அதனைத் தொடர்ந்து, சிறுவர் அலி(ரலி) தோழர் அபூபக்கர்(ரலி)

★ மௌலவி B.A.கலீலூர் ரஹ்மான் ரியாஜி, முஸ்லிம்களின் தாய்மார்கள், திருநெல்வேலி, 167, பக் 5.

★★ ஸையித் இப்ராஹீம், ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா, சென்னை 1990, பக் 39.

ஊழியர் ஸைது (ரலி) ஆகியோர், அண்ணல் (ஸல்) அவர்கள் இறுதி மாநபி என ஏற்று இஸ்லாத்தைத் தழுவினர்.

இறைச்செய்தியை எடுத்துரைத்தபோது எதிர்ப்புக்கள் எழுந்தன. கொடுமை இழைப்போரின் தள நாயகனாக அபூஜஹ்ல் இருந்தார். அன்னை கதீஜா (ரலி) அவர்கள் 65வது வயதில் மறைந்தார்கள்.★ குறைஷிகளின் கொடுமையும், கொடூரமும் தலைவிரித்தாடியது. தாஹா நபி (ஸல்) கி.பி. 622 செப்டம்பர் 9, 10 வெள்ளிக்கிழமை இரவு தம் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் இரகசியமாக மக்காவை விட்டு நீங்கினார்கள். அப்போது அண்ணலார் (ஸல்) நிகழ்த்திய அற்புதங்கள்....

ஹிஸ்ரத்

ஓர் இடத்தை விட்டு வேறொரு இடத்திற்கும், ஒரு நாட்டை விட்டு இன்னொரு நாட்டிற்கும், ஒரு நகரத்தை விட்டு இன்னொரு நகரத்திற்கும் குடிபெயர்ந்து செல்லுதல் ஹிஸ்ரத் ஆகும்.★★

மக்காவிலுள்ள குறைஷி காபிர்கள்(நம்பிக்கையற்றவர்கள்-முஸ்லிம் அல்லாதவர்கள்) அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், சொல்லிட இயலாத அளவிற்கு துன்பத்தைத் தந்து கொண்டிருந்தார்கள். இவர்களின் துயரினைக் கண்ட அண்ணல் நபி(ஸல்) அவர்கள், மக்கா நகரை விட்டு அவர்கள் வெளியேறுவதற்கு உரிய நேரத்தில் அனுமதி தந்தார்கள்.

முதல் ஹிஸ்ரத்

மக்கா நகர் குறைஷிகளின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள கி.பி. 615இல் ரஜப் மாதத்தில் 16 பேர்கள் மக்காவை விட்டு அபிஸீனியா நாட்டுக்கு ஹிஸ்ரத் செய்தார்கள்.

உதுமானுப்னு அப்பான், அவர்களின் துணைவியார் ருக்கையா, அபூஹு¬தைபத்துப்னு உத்பா, அவர்களின் துணைவியார் ஸஹ்லாபின் துஸ¬ஹைப், முஸ் அபுப்னு உமர், அப்துல் ரஹ்மான் இப்னு அவ்ப், ஜ¬பைறு இப்னு அவாம், அபூஸலமத்இப்னு அப்தில் அஸத், அவர்களது துணைவியார், உம்முஸலமா, உதுமான் இப்னு மஸ்ஊன், அப்துல்லா இப்னு மஸ்ஊத், ஆமிறுப்னு றபீஆ, அவர்களது துணைவியார் லைலா

★ வா. கமாலுத்தீன் ஆலிம், சுவர்க்கத்தின் தலைவி பாத்திமா நாச்சியார் (ரலி) சென்னை, 1993, பக் 26.

★★ S. கௌஸ்முஹியித்தீன், பூமான் நபியின் புனித வாழ்க்கை, முதல் பாகம், திருப்பத்தூர், 1985, பக் 191.

பின்துஅபீஹைதமா, அபூஸப்றா, ஹாத்தபுப்னு அமர், ஸுஹைஹலுப்னுபைளாஉ (ஸுஹைஹலுப்னு வஹ்ப்) ஆகிய 12 ஆண்களும், 4 பெண்களுமாகிய 16 பேர்கள் முதன் முதலில் ஹிஜ்ரத் செய்தவர்கள் ஆவர்.★

குறைஷித் தலைவர்களால் பிடித்த வர ஆட்களையும் குதிரை வீரர்களையும் அனுப்பியபோதும் இந்த 16 பேரும் அவர்கள் வருவதற்கு முன்பே அஷ்ஷுஐபா என்ற துறைமுகப்பட்டினம் மூலம் கப்பலில் சென்று விட்டனர்.

அபிசீனியாவை ஆண்டுவந்த அஹ்மஹத்துப்னு அப்ஹர் என்ற நஜ்ஜாஷி கிறிஸ்தவ மன்னர்; அவரிடம் சென்று அடைக்கலம் பெற்றனர். இதுவே வரலாற்றில் முதல் ஹிஜ்ரத் ஆகும்.

இரண்டாவது ஹிஸ்ரத்

ஹலரத் உதுமான் (ரலி) அவர்களும், ஹலரத் அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்களும், மற்றும் 81 ஆண்களும், 18 பெண்களும் இரண்டாம் முறையாக அபிஸீனியாவிற்கு ஹிஸ்ரத் செய்தார்கள். இறைவனுக்காகவும், இஸ்லாம் மார்கத்திற்காகவும் ஊரை வெறுத்து கிளம்பிய இரண்டாவது அணியினர் இவர்களாவர். இதனைத் தொடர்ந்து ஒரு சில சிறுசிறு ஹிஜ்ரத்கள் நடந்து கொண்டே இருந்தது.

நீதியின் சின்னம் உமர் (ரலி)

உமர் (ரலி) அவர்கள் கஃபாவிற்குச் சென்று, அதன் முற்றத்தில் நின்று தான் ஹிஜ்ரத் புறப்படும் செய்தியை பகிரங்கமாக அறிவித்து விட்டுப் புறப்பட்டார்கள். இன்னும் பல ஹிஜ்ரத்துகள் நடந்து கொண்டே இருந்தது. அது குறித்த வரலாற்றுச் செய்திகளை, மௌலவி A. அப்துர் ரஹ்மான் பாஜில் பாகவி எழுதிய ஹிஜ்ரத்-வரலாறு எனும் நூலில் விரிவாகக் காணலாம்.

மாநபி (ஸல்) அவர்களின் மாபெரும் ஹிஸ்ரத்

ஹிஸ்ரத் பயணப்பட்டியல் தொடர்ந்தது; மக்காவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்கர் சித்தீக் (ரலி) உள்ளிட்ட சிலரும் சிறையிலடைக்கப்பட்ட தோழர்களும் தவிர, இஸ்லாத்தினை ஏற்றிருந்த மீதமுள்ளவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்து சேர்ந்து விட்டனர். இறுதியாக ஈருலக நாயகர் இறைவனின் இறுதித் தூதர் (ஸல்) தங்களது மாபெரும் ஹிஜ்ரத் பயணத்தை, புதிய பாதையினைப் படைத்திடும் புனிதப் பயணத்தை, அகிலம் அனைத்திற்கும் அருளொளி வழங்கும் பயணத்தைத் துவக்கினார்கள். அப்போது நிகழ்ந்த இயற்கையின் அற்புதங்கள்....

★ S. கௌஸ் முஹியித்தீன், பூமான் நபியின் புனித வாழ்க்கை, பாகம் 2, 1988, பக் 35, 36.

ஆமிர் பின் புஹைரா

அண்ணல் (ஸல்) அவர்களின் 53-ஆண்டு கால மக்கா வாழ்க்கைக்குப் பின், அவர்கள் நபித்துவம் பெற்ற 13-ஆம் ஆண்டு மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

அண்ணலாருடன் அந்தப் பயணத்தில் அபூபக்கர்(ரலி) அவர்களும், அவர்களால் உரிமை விடப்பட்ட அடிமை ஆமிர் பின் புஹைரா (ரலி) ஆகியோரும், மக்காவிலிருந்து மதீனாவிற்கு பாதை காட்டுவதற்காக சம்பள அடிப்படையில் அப்துல்லாஹ்பின் அரீகத் (அப்போது முஸ்லிம் அல்ல) ஆகியோரும் இருந்தனர். அவர்கள் மேற்கொண்ட அந்தப் புனித பயணத்தின் தொடக்கம்...

சையதுன்னா அபூபக்ரு சித்தீக் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதி, விசுவாசிகளின் அதிபர் அபூபக்ரு சித்தீக் (ரலி) ஆவார்கள்; அன்னார் பத்ருப் போரிலே அண்ணல் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த கூடாரத்திற்கு மெய்க்காப்பாளர் ஆவார்.

மதீனா முனவ்வராவில் நபி (ஸல்) அவர்களின் அருகிலே நல்லடக்கம் பெற்றிருப்பவரும் அவர்களே. உஸ்மான் எனும் அபூகுஹாஃபா- (Aboo Kuhafa) ஸல்மா உம்முல்கைர் தம்பதியினர் புதல்வராகத் தோன்றியவர் அப்துல் காபா. அவரை, நபி பெருமானாரவர்கள் (ஸல்) அப்துல்லாஹ் என்று அழைத்தார்கள்.

சத்தியசீலர் என்னும் பொருளைக் குறிக்கும் சித்தீக், என்பதும், மேதை, சுதந்திர புருஷர் என்னும் பொருட்களைக் குறிக்கும் 'அதீக்' என்பதும் ஹஜ்ரத் அபூபக்ரு (ரலி) (கன்னியின் தந்தை) அவர்களின் சிறப்புப் பெயர்களாகும்.

நபி பெருமானர் அவர்கள் (ஸல்) பிறந்து இரண்டரை வருடங்கள் கழித்துப் பிறந்தவர்; நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் முதன் முதலில் இஸ்லாத்தை தழுவியவர்; அண்ணலார் காலத்திற்குப் பின் முதல் கலீபா-(இஸ்லாமிய அரச பீடத்தில் அடுத்து வந்தவர்) வாகப் பதவியேற்றவர் அபூபக்கர் (ரலி) ஆவார்கள்.

மதீனா செல்ல மனம் நாடுதல்

மதினாவிற்குள் இஸ்லாத்தின் இரேகை ஒளி பாய்ச்ச ஆரம்பித்தது. முஸ்லிம்கள் பத்திரமாக வாழத் தகுந்த இடமாகவும் மாறியது. உமர்(ரலி) அவர்கள் மதீனாவிற்குச் சென்றதும், அபூபக்கர் (ரலி) அவர்களின் மனமும் மதீனா செல்ல நாடியது. ஒருநாள் அண்ணல்(ஸல்) அவர்களைச் சந்தித்து, ஆபத்துக்களையும் அல்லல்களையும் தாங்கிக் கொண்டு மக்காவில் ஏன் தங்கியிருக்க வேண்டும்? மதீனாவிற்கு நாமும் ஏன் போகக்கூடாது? என்று

கேட்டார்கள். அதற்கு அண்ணல் (ஸல்) அல்லாஹ்விடமிருந்து ஆணை வரவில்லை. அவசரப்படாதீர்! உமக்குத் துணையாய் ஒரு தோழரை அல்லாஹ் தரலாம்'' என்றோ ''நீர் இரும்! நானும் அனுமதிக்கப்படலாம் என நம்புகிறேன்'' என்றோ பதில் கூறினார்கள் என்று சொல்லப்படுகிறது.

எண்ணூறு திர்ஹங்களுக்கு இரண்டு ஒட்டகங்கள்

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் மக்காவைவிட்டு போகத் தீர்மானித்து விட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் அங்கீகாரத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போகும்போது நம்மையும் அழைத்துக் கொண்டு செல்வார்கள்; என்பதனை அண்ணல்(ஸல்) அவர்களின் பதிலிலிருந்து அபூபக்கர் (ரலி) தெரிந்து கொண்டார்கள். எனவே பயணத்திற்குப் பயன்படும் என்று 800 திர்ஹங்களுக்கு இரண்டு ஒட்டகங்களை வாங்கினார்கள். அவை நன்கு கொழுத்து வேகப் பயணத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக அவற்றிற்கு வேலமரத்து இலைகள் உணவாக ஊட்டப்பட்டன. நான்கு மாதங்களாகப் புதிதாக வாங்கப்பட்ட ஒட்டகைகள் அபூபக்கர் (ரலி) அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இருந்தன.★

பகல் நேரத்தில் பெருமானார்

காலையிலோ, மாலையிலோ, தான் அபூபக்கர் (ரலி) வீட்டிற்கு அண்ணல் நபி (ஸல்) வருவது வழக்கம். ஆனால் அன்று அண்ணலார் (ஸல்) பகல் நேரத்தில் அபூபக்கர் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு வந்தார்கள். மக்காவை விட்டு இருவரும் ஹிஜ்ரத் செய்ய இருப்பதை அண்ணலார் (ஸல்) அறிவித்தார்கள்.

ஒட்டகையின் கிரயம்

இவ்விதச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே தாம் வாங்கிக் கட்டியிருந்த ஒட்டகைகளை அவிழ்த்துக் கொண்டு வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன் நிறுத்தி, அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டினார்கள் அபூபக்கர் (ரலி).

ஒட்டகை ஒன்றினை அண்ணல் (ஸல்) தனக்கென எடுத்துக் கொண்டார்கள்; அத்தோடு அதன் கிரையம் எவ்வளவு என்றும் கேட்டார்கள். அபூபக்கர் (ரலி) கிரயத்தை வாங்க மறுத்தார்கள். ஆனால் அண்ணல் (ஸல்) அதிகம் வற்புறுத்தவே ஒட்டகைக்கான பணத்தை அபூபக்கர் (ரலி) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.★★

★ முகம்மது முஸ்தபா, உண்மைக்கு ஓர்அபூபக்கர் (ரலி) சென்னை, 1989, பக் 45.

★★ மௌலவி A. சதக்கத்துல்லாஹ் பாக்கவீ, சையிதுனா அபூபக்ரு சித்திக் (ரலி) கம்பம், 1972, பக் 27.

குறைஷியரின் கொலைச் சதி

மக்காவில், குஸையுப்னு கிலாப் காலத்தில் கி.பி.540 -இல் கட்டப்பட்ட குறைஷியரின் பஞ்சாயத்துச்சபை தாருன் நத்வா'. இங்கு குறைஷிகளில் தலை சிறந்த பத்து கோத்திரத்தார்கள் கூடியிருந்தார்கள்.

ஹாஷிம் கோத்திரத்து உத்பா இப்னுரபீஆ,
உமய்யா கோத்திரத்து ஷைபா இப்னுரபீஆ,
நௌபல் கோத்திரத்து அபூஸுப்யான் இப்னுஹர்ப்,
ஜுஹ்றா கோத்திரத்து துமையா இப்னுஅதீ,
அஸத் கோத்திரத்து ஜுபைரிப்னுமுத்அம்,
தமீம் கோத்திரத்து ஹாரிஸிப்னுஆமீர்,
அதீகோத்திரத்து அந்நளீரிபனு ஹாரிஸ்
மக்ஜுமி கோத்திரத்து அபுல்புக்தா ரிப்னு ஹிஷாம்
ஜுமா கோத்திரத்து ஜமர்: இப்னுல் அஸ்வத்
சஹம்கோத்திரத்து ஹாக்கிமிப்னு ஹிஷாம்

ஆகிய பத்துக் கோத்திரத் தலைவர்களோடு, அந்தக் கோத்திரத்தார்களும், சிறப்பு அழைப்பாளர்களாக *ஹஜ்ஜாவின்* இரு புதல்வர்களான *நுபையா, முனப்பிஹ்,* மற்றும் உமய்யா இப்னுஹலப் ஆகியோர் கூடி பலவறாக யோசித்தனர். இறுதியில் அபூஜஹ்ல் ஆலோசனை சொன்னார்.

அபூஜஹலின் திட்டம்

''அண்ணல் முஹம்மது (ஸல்) வைக் கொலை செய்வது தனிப்பட்ட ஒரிருவரின் சொந்தக் காரியம் அல்ல. அதனால் தனிப்பட்டஎவரும் எதுவும் செய்ய வேண்டியதில்லை. குறைஷியரில் ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு இளைஞனை அனுப்பித்தர வேண்டும். அவ்வாறு வந்த எல்லாக் குடும்பத்து வாலிபர்களும் இரவோடு இரவாக அண்ணல் முஹம்மது (ஸல்)வின் வீட்டை முற்றுகையிட்டு நிற்கவேண்டும். அவர் எந்த சமயத்தில் வீட்டை விட்டு வெளியேறுகிறாரோ அந்தக் கணத்திலே அனைவரின் வாட்களும் ஒருமித்து அவர்மீது விழவேண்டும். இப்படி செய்வதனால் கொலைப்பழி எல்லாக் குடும்பத்தினர் மேலும் ஏற்பட்டுவிடும். எனவே எல்லாருடனும் ஹிஷாம் குடும்பத்தார் எதிர்த்து நிற்பது இயலாது போய்விடும். ஆகவே அவர்கள் குறைஷியர் எல்லோருடனும் எதிர்த்து நிறகத் துணியாது 'தியத்' என்னும் இரத்தப் பரிக்கிரயத்தை மட்டும் பெற்றுக்கொண்டு வாளா இருந்து விடுவார்கள்''

என்று அபூஜஹ்ல் திட்டம் தந்தார். அவ்வாறே கொலைத் திட்டத்தை நிறைவேற்றத் துணிந்தனர்.

அல் அன்ஃபால்

தித்திக்கும் திருமறையில் எட்டாவது அத்தியாயத்தில் (போரில் கிடைத்த பொருள்கள்) முப்பதாவது வசனம் இதோ...

''(நபியே!) உம்மைச் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மைக் கொலை செய்யவோ, அல்லது உம்மை (ஊரை விட்டு) வெளியேற்றி விடவோ உமக்கு விரோதமாக, நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த (நேரத்)தை நினைத்துப்பாரும். அவர்களும் சூழ்ச்சிசெய்து கொண்டிருந்தனர். (அவர்களுக்கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால் சூழ்ச்சி செய்வோரிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன் *(8:30)*

காத்திருந்த குறைஷியர்

அண்ணலார் (ஸல்) தங்கள் கரத்தினின்றும் ஒருபோதும் தப்பிடப் போவதில்லை என்று குறைஷிகள் தீர்க்கமாக எண்ணி, நபி பெருமானாரின் வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டனர். அக்கால அரபிகளின் வழக்கப்படி, பெண்களுள்ள இல்லங்களில் உடையவரது அனுமதியின்றி உள்ளே நுழைவது வழக்கமில்லை, அதோடு இருட்டிலேனும், குடியிருக்கும் வீட்டிற்குள்ளேயேனும் புகுந்து கொலை செய்வது அவர்களுக்கு இழுக்கை உண்டு பண்ணும்; எனவே அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்குள் நுழையாது, வெளியிலேயே தங்கியிருந்தார்கள். கதவின் துவாரத்தின் வழியே பார்த்தபோது, அண்ணல் (ஸல்) அவர்களின் கட்டிலின் மீது அவர்களது போர்வையுள் ஒருவர் உறங்குவதைக் கண்டனர்.

இபின் இஸ்ஹாக்

நபிகள் பெருமானே அங்கிருப்பதாய் எண்ணினர்; அவர்கள் வெளியில் எழுந்து வரும்போது, உடனே எல்லோரும் அன்னவர் மீது பாய்ந்து கொன்று விடலாம் என்று உறுதியாக நம்பிக் கொண்டு, வெளிப்புறத்திலே ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். வரலாற்றாசியர் இபின் இஸ்ஹாக் (Ibn Ishaq)தமது 'ஸீரத்' நூலில் (Sirat Rasul-Allah)இதைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

இறைவனின் அறிவிப்பு

குறைஷியரின் கொலை முடிவை இறைவன் ஹலரத் ஜிப்ரீல் (அலை)

மூலமாக அண்ணலாருக்கு (ஸல்) அறிவித்தான்; அத்தோடு அண்ணலாரை மக்காவை விட்டு மதீனாவிற்குச் செல்லவும் கட்டளையிட்டான்.

உயிருக்கு ஆபத்து!
உடமைகளை ஒப்படைத்திட ஆணை!

நபிகள் திலகத்தின் மார்க்கப் பிரசாரத்தின் மீது நம்பிக்கை வைத்திடாத குறைஷியர்கள், அண்ணலார் (ஸல்) மீது மட்டற்ற நம்பிக்கை வைத்திருந்தார்கள். அண்ணலாரிடம் ஏராளமான அடைக்கலப் பொருள்களை எல்லாம் கொடுத்து வைத்திருந்தார்கள். அவற்றையெல்லாம் அவரவர்களிடமே ஒப்படைக்க வேண்டிய அவசியத்தினை பெருமானார் (ஸல்) அப்போதும் மறந்திடவில்லை. தன்னை நம்பி பிறர் தன்னிடத்திலே கொடுத்து வைத்துள்ள அமானிதப் பொருள்களை இன்னார் இன்னாருக்கு உரிய பொருட்கள் எனச் சொல்லி, அதை அவர்களிடத்திலே ஒப்படைத்து விடுமாறு நபி (ஸல்) அவர்கள் ஹலரத் அலி (ரலி) அவர்களை அழைத்துக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி)

அதோடு இன்று இரவு நான் படுத்துக் கொள்ளும் கட்டிலில் நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். காலையில் எழுந்து இந்த அமானிதப் பொருட்களை எல்லாம் அதற்கு உரியவரிடத்தில் ஒப்படைத்து விட்டு நீங்களும் மதீனா நகருக்கு வந்து சேருங்கள் என்று கட்டளையிட்டார்கள் அண்ணலார் (ஸல்).

ஒரு பிடிமண்

அண்ணல் (ஸல்) கதவைத் திறந்து வாசலுக்கு வந்தார்கள்; ஒரு பிடி மண்ணை தங்கள் திருக்கரங்களினால் எடுத்து திருமறையின் 36வது அத்தியாயமான 'யாஸீனில்' இருந்து முதல் ஒன்பது திருவசனங்களை ஓதி (சொல்லியவாறு) வெளியில் சுற்றி நின்ற இளைஞர்கள் மீது தூவினார்கள்.

'வஜஅல்னா மின்பய்னி ஐ தீஹிம் ஸத்தன் வமின் கல்பிஹிம்
ஸத்தன் ஃபஅஃஷய்னா ஹும் ஃபஹும் லாயுப் ஸிருன்' ★

'அவர்களுக்கு முன்புறம் ஒரு தடுப்பும் பின்புறம் ஒரு தடுப்புமாக ஏற்படுத்தி நாம் அவர்களை மூடி விட்டோம். ஆதலால் அவர்கள் எதனையும் பார்க்க முடியாது. (திருகுர்ஆன் 36:9)

★ சூரத்துயாஸீன், ஜான் டிரஸ்ட் பதிப்பு.

அவர்களுக்கு எதுவும் புலப்படுவதில்லை★ எனும் திருமறையின் இந்த வசனங்களை ஓதி, அண்ணலார் (ஸல்) தங்கள் கரங்களிலிருந்து மண்ணை வீசி எறிந்து விட்டு வீட்டை விட்டு வெளியேறிய போது, சுற்றி நின்ற தலைவர்கள் எல்லாம் விழித்திருந்தும் நபிகள் நாயகத்தைப் பார்க்க முடியவில்லை.★★

அல்லாமா ஷிப்‘லீ நுஃமானீ (ரஹ்)

உருதுவில் ‘ஸீரத்துன் நபீ’ எனும் நூல் எழுதியவர் ஷம்ஸுல் உலமா அல்லாமா ஷிப்’லீ நுஃமானீ (ரஹ்) அரபி, பார்ஸி மற்றும் ஆங்கில மொழிகளில் வெளி வந்த பல நூற்களை ஆராய்ந்து இந்த நூலை எழுதியதற்கு, போபால் மஹாராணி ஸுல் தான் ஜஹான் பேகம் அவர்கள் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பே 50,000 ரூபாய் நன்கொடை கொடுத்தார்கள். அதனை 5-4-1928இல் தமிழாக்கம் செய்ய முயன்று, 25-2-1931-இல் அந்தப் பணியை முடித்து, 1932-இல் தமிழில் வெளிவந்த நூல் நபிகள் நாயக மான்மியம். தாருல் இஸ்லாம் ஆசிரியர்கள் நறையூர் பா.தாவூத்ஷா, ஹாபீஸ் ஏ.என். முஹம்மது யூஸுப் பாஜுல்பாகவி ஆகிய இருவரது முயற்சியால் அந்த நூல் 416 பக்கங்களில் வெளிவந்தது. இது குறித்து அதில் கூறப்படும் விவரம் ....

‘‘அல்லாஹ்வின் இயற்கையான குத்ரத் (சர்வ வல்லமை) வெளியில் நின்று கொண்டிருந்தவர்களை ஆழிய நித்திரையுள்ளே அன்றிரவு ஆழ்த்தி வைத்து விட்டது. அது சமயம் எங்கும் காரிருள் கம்மிக் கொண்டிருந்தது. உடனே நபிகள் (ஸல்) தங்களைக் கடந்த பன்னிரண்டாண்டுகளாகக் கைவிடாது காப்பாற்றி வந்த அந்த ஆண்டவனே இப்பொழுதும் எதிரிகளிடம் காட்டிக் கொடுத்து விடமாட்டானென்றும் மனஉறுதியுடன் தங்கள் இல்லத்துத் தெருக் கதவைத் திறந்து கொண்டே, ஆங்குக் குழுமி உறங்கிக் கிடந்த எதிரிகளினூடே தைரியமாக நுழைந்து வெளியில் வந்தார்கள்★★★

மாநபி (ஸல்) புனிதப் பயணம்

அங்கிருந்து மக்காவின் கஃபத்துல்லா அமைந்துள்ள எல்லையின் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்; ‘நின்பால் எனக்குப் பிரியம் அதிகமாயுண்டு. ஆனால் நின் மக்கள் என்னை இங்கு தங்க விடுகின்றார்களில்லையே’ என்று

★ மௌலானா ஸையித் அபுல் அஃலா மௌதூதி ரஹ், யாஸீன், சென்னை, 1988, பக் 18.

★★ இ.செ. முஹம்மது இப்றாஹிம், யாஸீன், மதுரை, 1948, பக் 6, 7.

★★★ நபிகள் நாயக மான்மியம், பக் 328.

அதனைப் பார்த்து கூறிவிட்டு ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் விண்மீன் வெளிச்சத்தின் உதவி கொண்டு தங்களது புனிதப்பயணத்தை மேற்கொண்டார்கள்.

தௌர் (தவ்ரு) மலை

மதீனா நகரம் வடக்குத்திக்கில் இருந்தது. ஆனால் அண்ணலார் (ஸல்) அவர்கள் தெற்குத் திக்கில் தங்கள் பயணத்தைத் (கி.பி. 622 செப்டம்பர் 9-10 வெள்ளிக்கிழமை) தொடர்ந்தார்கள்; அபாயத்திலிருந்து தப்பிட அவர்கள் செய்த உபாயம் இது.

தௌர் என்னும் குகைக்கும் ஹரம் ஷரீபுக்கும் (மக்காவின் ஆலயமுள்ள பகுதி) உள்ள எல்லைப்பகுதி ஏறத்தாழ 10 கி.மீ தூரமுண்டு. இது ஏமனுக்குச் செல்லும் சாலையில், மக்காவின் தென் திசையில் உள்ளது. தெஃளர் பின் ஸியாஹ் என்னும் ஞானி ஒருவர் சதா அக்குகையில் தங்கியிருப்பது வழக்கம். இதனால் அக்குகைக்கும், அதனைச் சூழ்ந்துள்ள மலைகளுக்கும் 'தௌர்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. பாவா ஆதம் (அலை) அவர்களின் அன்பு புதல்வர் சய்யிதுனா ஹாபில் ஷஹீதாக்கப்பட்ட (வீர மரணம் அடைந்த) இடம் இந்த தவ்ரு குகை என்ற கருத்தும் உண்டு. ★

கரிய இருள்; கரடுமுரடான கற்கள்; கடினமான பாறை; மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையே அண்ணல் (ஸல்) உயிருக்கு அபாயம் ஏற்படும் நிலை; இவைகளுக்கு மத்தியில் 'தவ்ரு' குகையினை அடைந்தார்கள் அண்ணலார் (ஸல்) அவர்கள்,

குகையினுள் செல்ல அண்ணல் நபி (ஸல்) ஆயத்தமானபோது அபூபக்ர் (ரலி) 'அது பழைய குகை; சுத்தமில்லாமல் இருக்கலாம்; நானே முதலில் செல்கிறேன் என்று உள்ளே சென்றார்கள்.

அங்கு சிதறிக்கிடந்த கற்களை அகற்றியும், குகையில் இருந்த துவாரங்களைத் தன்மேனி மீது கிடந்த துணியினைக் கிழித்தும் அடைத்தார்கள். ஒரு துளைக்கு மட்டும் துணி இல்லாததால் அந்தத்துளை அடைக்கப்படவில்லை.

அதன்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்களை உள்ளே வரும்படி அபூபக்ர் (ரலி) அழைத்தார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் தரையில் அமர்ந்தார்கள். தமது மடியை மஞ்சமாக்கினார்கள். தமது மடி மஞ்சத்தின் மீது படுத்துறங்கிட நபி (ஸல்) அவர்களை வேண்டினார்கள்.

★ மௌலவி A. முஹம்மது இஸ்மாயீல், சரித்திரப் பின்னணியில் கஃபா ரவ்ளா நீடூர்-நெய்வாசல், 1999, பக் 83.

பயணக்களைப்பினால் அண்ணலார் (ஸல்) அபூபக்ர் (ரலி) மடியில் படுத்தார்கள்... அப்போது நிகழ்ந்த இயற்கையின் அற்புதங்கள் .....

குறைஷியரின் கொதிப்பு

நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறிவுடன் அவர்களை எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று குறைஷியர்கள் ஒவ்வொரு இடமாகத் தேடினார்கள். பின் காலடிச்சுவடுகளைப் பார்த்து அடையாளம் சொல்லும் நிபுணர்களை அழைத்து வந்தனர்.

அபூகர்ஸமி

பாதச் சுவடுகளை வைத்தே மனிதர்கள் சென்ற பாதையைக் கண்டுபிடித்து விடுவதில் தேர்ச்சி பெற்ற அபூகர்ஸமி, என்பவர் தவ்ரு (ஃஸவ்ர்) குகையின் வாயிலை அடைந்தார். அவர் அங்குள்ள பாதச் சுவடுகளைப் பார்த்தபின், ''இறைவன் மீது ஆணையாக, அவர்கள் இதை விட்டும் ஓர் அடியும் தாண்டிச் செல்லவில்லை; அவர்கள் இந்தக் குகைக்குள் பதுங்கியிருக்க வேண்டும். அங்கு இல்லையேல் வானத்திற்கு ஏறியிருக்கலாம்; அல்லது பூமிக்குள் புதைந்திருக்கலாம்' என்றார்.★

அபூர்கர்ஸ்ஸின் பேச்சைக் கேட்டு எல்லோரும் நகைத்தார்கள். ஆனால் அபூஜஹல் மட்டும் அதை ஆமோதித்தார். 'பகைவர்கள் தூரத்தில் இல்லை' என்றும் கூறினார். அப்போது ஆடு மேய்ப்பவன் அவ்வழியே சென்றான்; 'இந்தக் குகையில் எவராவது ஒளிந்து கொண்டுள்ளனரா? எனக் கேட்டார்கள்.

நாம் இருவர்

'எவரையும் நான் பார்க்கவில்லை வேண்டுமானால் நீங்களே போய் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று ஆடு மேய்ப்பவர் கூறி விட்டுச் சென்றார்.

குகையின் வாயிலில் நிற்கும் பகைவர்களின் பாதங்கள் நன்கு தெரிந்தன. கொலைவாளுடன் பலராக வந்திருக்கும் பகைவர்கள் பார்த்து விட்டால் என்ன செய்ய இயலும்? 'நாம் இருவர், அவர்கள் பலர் இருக்கின்றனரே' என அபூபக்ர் (ரலி) அண்ணலாரிடம் கூறினார்கள்.

அல்லாஹ் நம்முடன்

''இல்லை, நாம் இருவர் அல்லர், நாம் மூவர்; 'நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்' என அல்லாஹ்வை முற்படுத்தி அண்ணலார்

★ எம்.ஆர்.எம். முகம்மது முஸ்தபா, உண்மைக்கு ஓர் அபூபக்கர் (ரலி) சென்னை, *1989, பக் 52.*

(ஸல்) கூறிய வாசகங்கள் அகிலம் உள்ளவரை நிலைத்திருக்கக்கூடிய வாசகங்களன்றோ! (திருகுர் ஆன் 9:40)

'No, Abu Bakr! Don't worry on that score. We are not two; we are three. Allah is with us' ★

"We are only two". 'Nay' said the prophet, we are three, Allah is with us' ★★

'பண்ணரிய ஈசனும் நம்

பக்கமுலின் அஞ்சலர்' ★★★ என்று அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்று அண்ணலார் (ஸல்) உரைத்ததை சொல்லிக் கொண்டே செல்லலாம்.

பகைவர்களில் ஒருவர் குகைக்குள் நுழைந்து பார்த்தால் என்ன? எனப் பகர்ந்தார். ஆனால் குகைக்குள் குனிந்து எவரும் பார்க்கவில்லை. அது இறைவன் நிகழ்த்திய அற்புதம்; உலக வரலாற்றினைத் திருத்தி எழுதிட முயலும் முதல் அத்தியாயம்.

சிலந்தி வலை

குகைவாயிலில் பின்னப்பட்டிருக்கும் சிலந்திவலை முஹம்மது (ஸல்) பிறப்பதற்கு முன்பிருந்தே இருப்பது போலத் தோன்றியது; அதனுள் எவரும் சென்றிருக்க இயலாது என்பதற்கு நேரடி சாட்சியாக இது விளங்குகிறது என்று எவரும் உள்ளே எட்டிப் பார்க்கவில்லை. ஒரு மரக்கொம்பில் இரண்டு புறாக்கள் கூடு கட்டி முட்டை இட்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது.★★★★ ''அவர்கள் நமக்கு அருகில், நாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டும், நம்மைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள்; அவர்களின் ஆற்றல் நம் பார்வையை மறைத்துக் கொண்டிருக்கிறது'' என்று அபூஜஹ்ல் அப்போதும் எண்ணிடத்தான் செய்தார்.

கொலை வாளுடன் வந்த கொடியவர்களை பலவீனமான சிலந்தி நூல்களைக் கொண்டு திருப்பி விட்டு அற்புதத்தை நிகழ்த்தியவன் இறைவன் அல்லவா!

பாம்பு தீண்டியது

இரவு முழுவதும் விழித்துக் கொண்டு; விடியற்காலை பொழுதில் அண்ணலார் (ஸல்) கண் அயர்ந்தார்கள். அவர்களை எழுப்பக் கூடாதென்று

★ M.R.M. ABDURAHEEM, MUHAMMAD THE PROPHET, Chennai, 1971, P. 277.

★★ K.L. GAUBA, The Prophet of the Desert, Lahore, 1946, P. 104.

★★★ சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், நபிகள் நாயக மான்மியமஞ்சரி, 1976, பக் 29.

★★★★ மு.ந. முஹம்மது சாஹிப், திருநபி சரித்திரம், 1969, பக். 101

அபூபக்கர் (ரலி) தங்கள் உள்ளங் காலைக் கொண்டு, குகையில் அடைக்கப்படாதிருந்த ஒரு துவாரத்தை அடைத்தார்கள். அதற்குள்ளிருந்த விரியன் பாம்பொன்று அபூபக்கர் (ரலி)யின் குதிக்காலில் நன்றாகக் கடித்து விட்டது.★ சிறிது முன்பு கணநேரம் அல்லாஹ்வை நான் மறந்த குற்றத்திற்காக பெற்ற தண்டனை இது என்று அபூபக்கர் (ரலி) அவர்கள் பலமுறை பிற்காலத்தில் இச்சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ★★

உமிழ்நீர் வேதனை மாற்றியது

பாம்பு அபூபக்கர் (ரலி) அவர்களைக் கடித்த போதினும் பெருமானார் (ஸல்) அவர்களை மட்டும் அருகினில் வந்து அந்தப் பாம்பு தீண்டக்கூடாதென்று அந்தத் துவாரத்தை மீண்டும் அதிக பத்திரமாகப் பொத்திக் கொண்டேயிருந்தார்கள்; எனினும் நோவு சகிக்க முடியவில்லை; கண்ணீர் வடியத் துவங்கியது; அண்ணலார் (ஸல்) திருமுகத்தில் அந்தத் துளிகள் விழுந்தது. விழித்துப் பார்த்த அண்ணலார் (ஸல்) விஷயம் அறிந்தார்கள். தங்களது உமிழ்நீரைத் தொட்டு, அல்லாஹ்வின் நாமத்தைச் சொல்லித் தடவினார்கள். அவர்கள் நோவினை எல்லாம் பறந்தோடிப் போயிற்று; இதுவும் இறைவனின் அற்புதமன்றோ!

மூன்று நாட்கள் மலைக் குகையில்

அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்டுமந்தையை ஒட்டிக் கொண்டு வந்த ஊழியர் ஆமிர்பின் புகைரா, அவர்களின் மகள் அஸ்மா (ரலி) ஆகியோர் ஆட்டு மந்தைகளை மேய்ப்பது போல் குகைக்கு வந்து, உதவிகள் செய்தும் நகரில் பேசப்படும் செய்திகளைச் சொல்லிச் சென்றார்கள். அதன் பின்னர் அல்கஸ்வா என்றும் வேகமாகச் செல்லும் ஒட்டகையில் அண்ணலார் (ஸல்) ஏறிக் கொண்டார்கள். அபூபக்கர் (ரலி) அவர்களும் தம் ஒட்டகையில் ஏறிக்கொண்டார்கள்; அகில உலகத்தின் வரலாற்றை மாற்றிட இருக்கும் அற்புதப் பயணம் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கித் துவங்கியது.

ஸுராக்கா இப்னுமாலிக்

''அண்ணலார் (ஸல்) அவர்களையோ, அவர்களின் தலையையோ தங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பவர்களுக்கு நூறு ஒட்டகைகள்

★ அந்தப் பாம்பு, அண்ணலார் (ஸல்) அவர்களின் திருமுகத்தைக்காண பல ஆண்டுகாலம் அந்தக் குகையில் காத்திருந்ததாகவும், அதனைத் தடுக்கும் வகையில் குதிகாலால் மறைத்ததால், அவர்களைக் கடித்ததாகவும் சொல்லப்படுகிறது.

★★ N.B. அப்துல் ஜப்பார், நபிபெருமானார் வரலாறு, சென்னை 1978, பக் 109.

பரிசளிக்கப்படும் என பகைவர்கள் அறிவித்திருந்தனர். அது போன்றதொரு தொகையே ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் விலையாக கூறப்பட்டது.

மத்லஜ் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தூதன் இந்தச் செய்தியை சொன்னார்; ஸுராக்கா இப்னுமாலிக் இதைக் கேட்டார். உடனே மதீனாவின் பாதையை நோக்கி குதிரையில் விரைந்தார்; புறப்படும் போதே இருமுறை தமது குதிரையிலிருந்து விழுந்தார்; எழுந்தார்; எனினும் நூறு ஒட்டகைகளின் ஆசையினால் விரைந்தார்.

புழுதிப்புயல்

ஹளரத் அபூபக்கர் (ரலி) அண்ணலார் (ஸல்) அவர்களின் முன்னும் பின்னுமாக இடமும் வலமுமாக மாறி மாறிச் சென்று கொண்டிருந்தார்கள். தொலைவில் தெரிந்தது புழுதிப்புயல்; தங்களை நோக்கி எவரோ விரைந்து வந்து கொண்டிருப்பதை அவர்களின் பார்வை கண்டது, சற்று நேரத்தில் ஸுராக்கா உருவிய வாளுடன் அண்ணலார் (ஸல்) அவர்களை நெருங்கிவிட்டார். இரண்டு அல்லது மூன்று ஈட்டிகள் தொலைவிலேயே ஸுராக்கா இருந்தார்.

''இறைவா! நீ எங்களுக்குப் போதுமானவனாகி விடு-நீ நாடுகிற முறையில்-என அண்ணலார் (ஸல்) அப்போது பிரார்த்தித்தார்கள்.

புரவியின் கால்கள் பூமியில்

உடனே ஸுராக்கா ஏறி வந்த குதிரையின் கால்கள் பூமியில் புதையுண்டன; அது தடுமாறியது. உடனே ஸுராக்கா அண்ணலார் (ஸல்) அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார்; அண்ணலார் (ஸல்) அவர்களின் பிரார்த்தனையில் அக்குதிரையின் கால்களை பூமி விட்டு விட்டது. இவ்வாறு மூன்று முறை நடந்தது. அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு, பூமி கட்டுப்பட்டது என்பதனை அறிகிறபோது அண்ணலார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் துணையோடு நிகழ்த்திய அற்புதத்தினை அறியமுடிகிறது.

பின்னர் ஸுராக்கா அண்ணலார் (ஸல்) அவர்களிடம் மன்னிப்புக் கேட்டார். அத்தோடு அண்ணலார் (ஸல்) திரும்பவும் மக்கா நகருக்கு வெற்றியோடு திரும்பும்போது, தம்மைஒன்றும் துன்புறுத்தக்கூடாது' என்று அபயச் சீட்டு எழுதித்தருமாறு வேண்டினார்.

அண்ணலார் தந்த அபயச் சீட்டு (அமன்நாமா)

அவ்வாறே அண்ணலார் (ஸல்) ஸுராக்காவிற்கு அபயச் சீட்டு அளித்திடப் பணித்தார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் பணியாள் ஆமீர் பின்புஹைரா ஒரு தோல்மீது அவ்வண்ணமே ஓர் அமன்

நாமாவை அளித்தார். அண்ணலார் (ஸல்) தங்களது கணையாழியையும் அவரிடம் அளித்ததாகவும் கூறப்படுகிறது. பின்னாளில் தாயிபின் படையெடுப்பின் போது அவரது உயிரை அதுகாப்பாற்றியது.

பாரசீக மன்னரின் பொற்காப்பு

அத்தோடு மட்டுமல்லாது அண்ணலார் (ஸல்) அந்த அபாய வேளையிலும் ஸுராக்காவிடம் சொன்னார்கள்.

''பாரசீக மன்னர் கிஸ்ராவின் பொற்காப்புகளையெல்லாம் இந்த ஸுராக்கா அணிந்து கொள்ளும் அதிர்ஷ்டம் வாய்க்கும்'' என்றார்கள். சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னால் நிகழப்போகும் ஒரு சம்பவத்தைக் குறித்து, அது சமயம், அதுவும் உயிர் தப்பும் பொருட்டு ஒரு நகர் விட்டு மற்றொரு நகரை நோக்கி, ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்தோடும் வேளையில் இவ்வாறு கூறுவதென்பது இயலுகிறகாரியமா! இறைவனின் துணையோடு இறுதித் திரு நபி (ஸல்) நிகழ்த்திய இன்னொரு அற்புதமல்லவா இது!

கலீஃபா உமர் (ரலி)

ஹிஜ்ரி 21ஆம் ஆண்டு; நிஹாவந்தின் (ஈரான்)யுத்தம் முடிந்தது; இரண்டாவது கலீபா உமர் (ரலி) அவர்களது ஆட்சி; பாரசீகதேசம் முஸ்லிம்கள் வசமாயிற்று; பாரசீகத்தை ஆண்ட ஹர்மூஸ் கிஸ்ராவின் (நௌஷேர்வான்) பொற்காப்பு ஒன்றினை கலீஃபா உமர் (ரலி) அவர்கள் கொண்டு வந்தார்கள்.

ஹலரத் ஸுராக்கா (ரலி) தம் நோய்ப்படுக்கையில் அப்போது இருந்தார்கள். 'அண்ணலார் (ஸல்) முன் அறிவித்த பொற்காப்பு இதோ' பெற்றுக்கொள்ளும் என்றார்கள். ஆனால் ஸுராக்கா (ரலி) உடனடியாக அதைப் பெற்றிடவில்லை. அண்ணலார் (ஸல்) என்னிடம் பொற்காப்புகள் இரண்டு என்று அல்லவா அறிவித்தார்கள்; தாங்கள் ஒன்றை மட்டும் தருகிறீர்களே என்று கேட்டார்கள்.

அண்ணலாரின் (ஸல்) சொல் பொய்ப்பதில்லை

கலீஃபா உமர் (ரலி) கருவூலப் பொறுப்பாளரை அழைத்து அதுபற்றி கேட்டார்கள், அவரோ ஒரே ஒரு பொற்காப்பு கருவூலத்தில் இருந்ததாகக் கூறினார். ஆனால் ஸுராக்காவோ 'இல்லை-இல்லை, இதனை நான் ஏற்பதற்கில்லை; என் ஏந்தல் நாயகம் முன்மொழிந்த சொல் ஒரு போதும் தப்பாக நான் ஒப்புவதற்கில்லை' என்றார்கள். மீண்டும் கருவூலம் ஆராயப் பட்டது. கிஸ்ராவின் மற்றொரு பொற்காப்பும் அதில் இருக்கவே செய்தது.

பாராண்டவரின் பொற்காப்புகள் பாலைவன அரபியின் கரங்களில் அணிவகுத்தது. அண்ணலார் (ஸல்) 20 ஆண்டுகளுக்கு முன் கூறிச் சென்றது, இறைஅருளால் நிகழ்ந்தது அற்புதமன்றோ!

(மனிதர்களில் ஆண்களுக்கு பொன்னாபரணம் விலக்கப்பட்டது; ஆனால் மாநபியின் தோழர் ஸுராக்கா (ரலி) அவர்களுக்கு மட்டும் பொற்கடையங்கள் அனுமதிக்கப்பட்டவை)

(அதன் பின்னரும் வாழ்ந்திருந்த ஹழ்லரத் ஸுராக்கா இப்னுமாலிக் இப்னு ஜஅஷம் (ரலி) அவர்கள், ஹழ்லரத் உஃஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 24 இல் மறைந்தார்கள்)★

திருப்புமுனை

அண்ணலார் (ஸல்) தனது தாயாரின் பூர்வீக நகரமான மதீனாவை நோக்கிப் பயணத்தைத் துவக்கியது குறித்து அது அவர்களது வாழ்வில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது என்று பிலிப் கே. கிட்டி என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

The Hijrah, with which the Makkan period ended and the Madinese period began Proved a turning-point in the life of Muhammad.★★

ஹிஜ்ரி ஆண்டு துவக்கம்

மக்காவிலிருந்து மதீனா நகர் நோக்கி அண்ணலாரின் புனிதப் பயணத்திலிருந்து தான் இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டு (Migration) (Hijrain Arabic) துவங்குகிறது என்பதும் அனைவரும் அறிந்த செய்தியாகும்.

குபா

மலைகளையும், சமவெளிகளையும், பாலைவனங்களையும், நீரூற்றுகளையும் மேடுகளையும் பள்ளங்களையும் அண்ணலார் (ஸல்) தங்களது புனிதப்பயணத்தில் கடந்து எட்டாவது நாளில் கி.பி. 622 செப்டம்பர் 24 ஆம் தேதி மதீனா பாலைவனச் சோலையினை விளிம்பில் அமைந்திருந்த குபா (Quba) குடியிருப்புக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பயணம் பத்திரமாக நிறைவேறியது.★★★

★ எம்.எஸ். முஹம்மது தம்பி, நபிகளின் நாயகத் தோழர்கள், தஞ்சை, 1998, பக் 268.

★★ Philip K.Hitti, History of the Arabs, London, 1964, P.116. &
Philip K.Hitti, Makers of the Arab History, London, 1968, P. 13.

★★★ அஸ்கர் அலி எஞ்ஜினியர், இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும், 1993, பக் 129.

மதீனா மாநகரம்

யத்ரிப் என்பதே திருமதீனாவுக்கு முதல் முதல் வழங்கப்பட்ட பெயராகும். தாபா, தய்யிபா, தாஇபா, முதய்யபா, தைபா, ஹபீபா, முஹிப்பா, மஹ்பூபா கைரா, கையரா, ஆஸிமா, மஹ்ரூஸா மஹ்பூலா, மஹ்பூபா, மஹ்பூரா, மர்ஹூமா மர்ஸூகா, முகத்தஸா, முபாரக்கா, மூமினா முஸ்லிமா, முக்த்தானா, முஹர்ரமா, பர்ரா, பார்ரா, பஹ்ரா, புஹைரா, பஹீரா நாஸிரா, ஜாபிரா, ஜபாரி, ஜப்பாரா, ஹஸனா, கலபா, பாலிஹா, நாஜியா, ஷாபியா, தாருல்ஹிஜ்ரா, தாருல்ஈமான் தாருல் இஸ்லாம், தாருஸ்ஸுன்னா, தாருஸ்ஸலாம், தாருல்பத்தஹ், தாருல் அப்றார், தாருல் அக்யார், அர்லுல்லா, அர்லுல்ஹிஜ்ரா அகாலத்புல்தான், அகாலத்குரா, சையித்புல்தான் பைத்துரசூலுல்லா, குப்பத்துல் இஸ்லாம், மூவப்பயா, ஹரமுரசூலில்லாஹ் என்பவை திருமதீனாவின் இதரப் பெயர்களாகும்.★

நபிகள் பெருமானார் (ஸல்) அங்கு விஜயஞ்செய்து வசிக்க ஆரம்பித்ததிலிருந்து அதன் பெயர் மதீனத்துந்நபி 'தீர்க்கதரிசியின் பட்டணம்' என்று அழைக்கப்பட்டது. பின்பு அதிலிருந்து சுருக்கமாக 'அல்மதீனா' என்று அழைக்கப்பட்டு வருகிறது.★★

சிறப்புக்கள் பல கொண்ட மதீன மாநகர் நோக்கி அண்ணலார் (ஸல்) மேற்கொண்ட புனிதப்பயணத்தின்போது நிகழ்ந்த இயற்கையின் அற்புதங்கள் பலப்பல; அண்ணலார் (ஸல்) அவர்கள் வாழ்க்கையில் இறைவனின் துணையோடு நிகழ்த்திக்காட்டிய அற்புதங்கள் அதிகம்; அவற்றில் ஒரு சில மட்டும் இதோ...

அற்புதங்கள் ஐவகை

இறைத்தூதர் (நபி)மார்களால் நிகழ்த்தப்படும் அற்புதங்களுக்கு *'மு:ஜிஸாத்'* எனவும், வலிமார்களால் (இறைநேசர்) நிகழ்த்தப்படும் அற்புதங்களுக்கு *'கராமத்'* எனவும், சாதாரண முஸ்லிம்களால் நிகழ்த்தப்படுபவைகளுக்கு *'மஊனத்'* எனவும், முஸ்லிமல்லாதோரால் நிகழ்த்தப்படுபவைகளுக்கு அவர்களது தஃவாவிற்கேற்ப *'இஸ்தித்ராஜ்'* எனவும், அத்தாவாவுக்கு விரோதமாக நிகழ்த்தப்படின் *'இஹானத்'* எனவும் கூறுப்படும்★★★

★ தொ.கு.அப்துல்கரீம் பாகவி, திருமதீனாவின் சரித்திரம், பள்ளபட்டி, *1961*, பக் *39-43*.

★★ Peter Mansfield, The Arabs, London, 1977, P. 25.

★★★ N.A. *நிஜாமுத்தீன் ஸிராஜ், அகிலத்தின் அழகிய முன்மாதிரி அண்ணல் முஹம்மது நபி (ஸல்) 1989, பக் 35, 36.*

உலகில் தோன்றிய நபிமார்களுக்கு (தீர்க்கதரிசிகள்) முஃஜிஸா எனும் அற்புதங்கள் அல்லாஹ்வால் அருளப்பட்டுள்ளது போலவே நமது மாநபி (ஸல்) அவர்களுக்கும் இறைவனால் அருளப்பட்டுள்ளது.

வானகம், வையகம், இவை இரண்டிற்கும் இடையிலுள்ள சர்வ பொருள்களும் உண்டாவதற்குக் காரணகர்த்தராய் இருந்தது பெருமானார் (ஸல்) அவர்கள்தான்.

ஏரி வறண்டது - நதி ஸ்தம்பித்தது

அவர்கள் அகிலத்தில் அவதரித்தபோது, ஸாவா என்னும் நகரத்திலிருந்த மிகப்பெரிய ஏரி ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாமல் வறண்டு போயிற்று.

புராத் எனும் (யூப்ரட்டிஸ்) வற்றாத ஜீவ நதியில் தண்ணீர் ஓடாமல் ஸ்தம்பித்து நின்றது.

வாய்க்கால் வெள்ளப்பெருக்கு

'சமாவா' என்னும் வாய்க்காலில் எப்போதும் தண்ணீர் இருக்காது; ஆனால் அண்ணலார் (ஸல்) அவதரித்த நேரத்தில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.

அணையா நெருப்பு அணைந்தது

பாரசீகத்தார் அணையா நெருப்பை வணங்கி வந்தனர். அந்நெருப்பு அணைந்ததோடு மட்டுமன்றி அங்கு தண்ணீருக்குரிய ஈரநைப்பும் ஏற்பட்டது.

விருட்சங்களின் வரவேற்பு

அண்ணலார் (ஸல்) தமது 12வது வயதில் ஷாம்தேசத்திற்கு வியாபாரம் செய்ய தம் பெரிய தந்தையார் அபூதாலிப் அவர்களுடன் சென்றார்கள். 'புஸ்ரா' என்ற நகரில் அண்ணலார் (ஸல்) சென்று கொண்டிருந்த போது பாதையிலிருந்த மரங்கள் அனைத்தும் அவர்களை வரவேற்று அசைந்து ஆடியது.

மரங்கள் நடந்து வந்தன

ஒருமுறை அரபி ஒருவர் அண்ணலாரிடம் (ஸல்) எனக்கு ஏதாவது ஒரு அற்புதத்தை நிகழ்த்திக் காட்டுமாறு வேண்டினார்; அதற்கு அண்ணலார் (ஸல்) அதோ நிற்கும் மரத்தினிடம் சென்று அல்லாஹ்வின் தூதர் உன்னை அழைக்கிறார்' என்று கூறும்படி கூறினார்கள். அவ்வாறே மரம் வேருடன் கிளம்பி வந்தது; பின்னர் அண்ணலார் (ஸல்) கேட்டுக்கொண்டதன்படி திரும்பவும் தன்னிடத்திற்கே அம்மரம் சென்று நின்றது.

கல்லை கல் தடுத்தது

ஒருமுறை நபி பெருமானார் (ஸல்) கஃபாவின் மதிற்சுவர் ஓரத்திலே தொழுது கொண்டிருக்கும்போது அபூஜஹிலின் ஆட்கள் பெரிய கல்லை மிகக் கஷ்டப்பட்டு உருட்டி பெருமானார் (ஸல்) இருக்குமிடத்திற்கு நேர் மேல் சுவரின் விளிம்பில் வைத்தனர்; தியானத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்த அண்ணலார் (ஸல்) மீது அந்தக் கல்லைத் தள்ளிட முயன்றனர். கஃபாவின் சுவரிலிருந்து வெளிப்பட்ட மற்றொரு கல் அதனை தடுத்தது; தியானத்தை முடித்து அண்ணலார் (ஸல்) அங்கிருந்து கிளம்பியதும் அந்தக் கல் அவர்கள் தொழுது கொண்டிருந்தஇடத்தில் விழுந்தது.★

சந்திரன் பிளவுபட்டது

அண்ணலார் (ஸல்) இஸ்லாமிய மார்க்கப்பிரச்சாரம் செய்வதை மக்காவிலுள்ள எதிர்ப்பாளர்கள் பலவகையிலும் எதிர்த்தும், சூழ்ச்சிகள் பலவும் செய்தும் வந்தனர். அண்ணலார் (ஸல்) ஒரு மந்திரவாதி; சூனியக்காரர்; இவர் செய்யும் மந்திரமும் சூனியமும் பூமியில் தான் நடைபெறச் செய்யும்; விண்ணில் நடைபெறாது; எனவே நாம் அவரிடம் சென்று விண்ணிலிருந்து சந்திரனை இரண்டாகப் பிளக்கும்படி கூறுவோம். அதில் அவர் தோல்வியுறுவார்' என்று பேசி முடிவெடுத்த காபிர்கள் (இறை நிராகரிப்பாளர்கள்) அதனை நிறைவேற்றிட அண்ணலாரிடம் சென்றார்கள்.

''நீர் உண்மை நபியாக இருப்பின் பூரணச் சந்திரனை இரண்டாகப் பிளக்கச் செய்து காண்பித்தால் நாங்கள் உம்மை நபியென ஏற்றுக் கொள்வோம் என்றார்கள்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவின் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இதோ பாருங்கள் எனக் கூறி சந்திரனைப் பார்த்து தங்களது விரல்களால் சமிக்ஞை செய்தார்கள். அது இரண்டாகப் பிளந்து வந்தது. மற்றொரு சமிக்ஞை செய்தார்கள். பிளந்த சந்திரன் ஒன்றாகியது.

மக்காவாசிகள் மட்டுமின்றி சுற்றுப்புற கிராமவாசிகள் அனைவரும் இதனைப் பார்த்து அதிசயத்தில் ஆழ்ந்ததை சரித்திரம் கூறுகிறது.

ஹிரா மலைக்கு இருபுறங்களிலுமாக சந்திரன் பிரிந்து சென்றது. அந்த இரு துண்டுகளினூடே ஹிரா மலை காணப்பட்டது என்று புகாரி, முஸ்லிம் நூற்கள் சான்று தருகின்றன.

★ மௌலவி S.A. செய்யது இபுறாஹீம் பாக்கவி, முஃஜிஸாத்-துன் நபி, அண்ணலாரின் அற்புதங்கள், 1969, நெல்லை, பக் 46, 47.

ஹிஸ்ரத் அனஸ்(ரலி)

நபி (ஸல்) அவர்கள் கஃபாவிற்குப் பக்கத்திலுள்ள அபூகுபைஸ் மலை மீதிருந்து தமது கலிமா விரலால் சந்திரனை இரண்டு துண்டுகளாகப் பிளந்து காட்டினார்கள் என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள்அறிவித்துள்ளார்கள். (இப்னு ஜுறைர்)

ஜமூரன் ஸாமரி

கேரள மலபார் பகுதியை ஆண்ட மன்னர் ஜமூரன் ஸாமரி, இந்தச் சம்பவம் நடைபெற்ற போது தமது அரண்மனையில் உப்பரிகையில் உலவிக் கொண்டிருக்கும்போது சந்திரன் பிளவுபட்ட காட்சியினைக் கண்டார். அரசு தஸ்தாவேஜுகளில் இதனைப் பதிய வைத்தார். இதுபற்றி ஆராய்ந்து, உண்மையறிந்தார்; இஸ்லாத்தினைத் தழுவினார். அரசப் பொறுப்புக்களை இளவரசனிடம் ஒப்படைத்து விட்டு, பாய்மரக் கப்பலில் ஹிஜால் நோக்கி பயணமானார்; இடையிலேயே மரணமுற்று எமன் நாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இச்சம்பவங்களைப் பற்றி தாரிகே இஸ்லாம், தாரிகே பரிஷ்தா (புகழ்மிக்க வரலாற்று ஆசிரியர் பரிஷ்தா எழுதியது) நூற்கள் சான்று தருகின்றன. ★

வாள் வரவில்லை

ஒருமுறை பெருமானார் (ஸல்) முன், எதிரே ஆமிரிப்னுத்துபைலும், அவர்களுக்குப் பின்புறமாக உரீதுப்னுறபீஆவும் நின்ற வண்ணம் பேசிக் கொண்டிருந்தனர். உரீதுப்னுறபீஆ பெருமானார் (ஸல்) அவர்களை பின்புறமாக இருந்து வாளை உருவிக் கொல்ல பலமுறை முயற்சித்த போது, அவரது உறையை விட்டு வாள் வெளியே வரவில்லை; இந்த அற்புதம் அண்ணலார் (ஸல்) வாழ்வில் நடந்தது.

நெருப்புமண்டலம் மீது ஆதிக்கம்

அண்ணலார் (ஸல்) அவர்கள் உபதேசத்தைக் கேட்டு வந்த மாதரசி ஒருவரை அவர் கணவர் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் போட்டார். அதன்பின் அவர் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வந்து, ‘உம்முடைய மார்க்கத்தை ஏற்ற எனது மனைவியை நெருப்பிலிட்டு கொன்று விட்டேன்’ என்றார். அதற்கு அண்ணலார் (ஸல்) ‘நிதானமிழந்தவரே, நீர் நினைப்பது போல அவள் நெருப்பில் வெந்து அழிந்து போகவில்லை. அவள் ஆனந்தமாக அந்நெருப்பில் ஜீவித்துக் கொண்டிருக்கிறாள்’ என்றார்கள்.

★ தி.அ.தாவுத்ஷரீப், கஷ்தின் சிறப்பு, சென்னை, பக் 58, 59.

வீட்டுக்கு வந்து கணவன் பார்த்த போது, மனைவி தான் அணிந்திருந்த புடவையின் ஒரு சிறுபாகம் கூட நெருப்பில் எரியாமல் இருப்பதைக் கண்டு அவர் மனம் மாறினார். அல்லாஹ்வின் துணையோடு அண்ணலார் நிகழ்த்திய அற்புதமன்றோ இது!

அம்மார் பின் யாஸிர் (ரலி)

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் மக்கா நகர குறைஷியர்களின் கொடுமைகளுக்கு தம் குடும்பத்தையே பலியாக, கொடுத்தவர் ஹலரத் அம்மார் இப்னு யாஸிர் (ரலி)

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக எழுதிட இயலாத அளவில் இன்னல்களைஏற்றவர் அவர்.

ஒருநாள் அம்மார்-பின் யாஸிர் (ரலி) அவர்களைத் தடிகளினாலும், சாட்டைகளினாலும் காபிர்கள் அடித்து கொடுமைப்படுத்தினர். அடுப்புத் தணலில் நன்கு பழுக்க வைக்கப்பட்ட இரும்பின் மீது அவர்களைக் கிடத்தினார்கள்; அவர்களின் மேனியெல்லாம் பொசுங்கிப் பொங்கியது; அவ்வழியாக வந்த அண்ணலார் (ஸல்) வன்கொடுமைக்குள்ளாயிருந்தும், இறை விசுவாசத்திலிருந்து வழுவிடாத அம்மார் (ரலி) அவர்களைக் கண்டார்கள்.

அம்ரி இப்னுமைமூன் (ரலி)

அம்ரி இப்னு மைமூன் அது குறித்து அறிவிக்கிறார்கள். கருணை நபி (ஸல்) அந்த நெருப்பிற்கு ஆணையிட்டார்கள்: 'நெருப்பே! நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் மீது ஆகியதுபோல் அம்மார் மீதும் குளுமையாகவும் சாந்தியாகவும் ஆகிவிடு என்று' ★

அடுத்த நொடியில் நெருப்பு குளுமையாயிற்று. அம்மார் அவர்களின் மேனியில் அண்ணலார் (ஸல்) கரம் பட்டதும் மேனி பூரண சுகம் பெற்று முன் போல் ஆயிற்று. நெருப்பு மண்டலத்தின்மீது அண்ணலார் (ஸல்) கொண்டிருந்த ஆதிக்கத்திற்கு மற்றுமோர் சான்று இது!

முதுமை அடைந்த அம்மார் (ரலி)யின் தந்தை இரு கால்களும் இரண்டு ஒட்டகைகளோடு தனித்தனியாகக் கட்டப்பட்டு, எதிர் எதிர் திசைகளில் விரட்டப்பட்டு, அவர்களின் உடல் இரு கூறாகக் கிழித்தெரியப்பட்டு ஷஹீதாக்கப்பட்டார். அவரது துணைவியார் ஸுமையா அம்மையாரின் பெண்மைத் தலத்தை நோக்கி அம்பெய்து

★ M.S. ஸெய்யது முஹம்மத் அன்வரி, நபித் தோழர்களின் சீரிய வரலாறு, சென்னை, *1988*, பக் *44*.

துடிதுடிக்கக் கொன்றனர் என்பதும் வரலாறாகும்.★ இறைவனின் மார்க்கத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணித்த முதற் பெண்மணி அம்மார் (ரலி) ஆவார்.

நீர்மண்டலம் மீது ஆதிக்கம்

அண்ணலார் (ஸல்) அவர்களும், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களும் மதீனாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, வழியில் தென்பட்ட ஒரு கிழவியின் இல்லத்திற்குச் சென்றார்கள்.

தண்ணீர் தாகமும், பசியும் அதிகமாக இருந்த நிலையில், அக்கிழவியிடம் இருந்த மெலிந்த ஆட்டில் பால் கறந்து கொள்ள அனுமதி கேட்டார்கள். 'அதில் பால் இல்லை; நீங்கள் விரும்பினால் கறந்து கொள்ளுங்கள்', என்று கிழவி பதில் கூறினாள். பெருமானார் (ஸல்) பிஸ்மில்லாஹ் சொல்லி பால் கறந்தார்கள்; பயணத்தினர் பாலைக் குடித்தும், இன்னும் பலர் குடிக்கும் அளவிற்கு மீதிப்பாலும் இருந்தது: அத்தோடு அந்த ஆடு அதன்பிறகும் ஏராளமாகத்தொடர்ந்து பால் கொடுத்துக் கொண்டும் இருந்தது.★★

ஸாலீம் பின் அபீ ஸஅத் (ரலி)

ஓர் சமயம் நபி (ஸல்) அவர்கள் தண்ணீர் நிறைந்த தோல் பையினை ஸஹாபாக்களின் (தனது தோழர்களிடம்) கையில் கொடுத்து, வழியில் இது உங்களுக்கு உணவாகப் பயன்படும் என்றார்கள்.

ஸஹாபாக்களின் குழுவினர் பயணத்தின் போது பசி வந்த வேளையில், தோல் பையைத் திறந்தார்கள். அதிலுள்ள தண்ணீர் சுவையான பாலாக மாறி இருந்தது. அனைவரும் அதனைப் பருகினார்கள்.

ஸாலிம்பின் அபீ ஸஅத் (ரலி) அவர்கள் மூலம் இப்னு ஸஅத் (ரலி) இதனை அறிவிக்கிறார்கள் என்று 'கலாமுல் முபீன்' நூல் இதற்கு சான்று தருகிறது.

மழைக்காகப் பிரார்த்தனை

ஒரு முறை மக்காவில் கொடும் பஞ்சம் ஏற்பட்ட போது, மக்கள் அண்ணல் (ஸல்) அவர்களிடம் வந்து மழையின்மையை நீக்கிட இறைவனிடம் பிரார்த்திக்க கோரினார்கள். அண்ணலார் (ஸல்)

★M.S. முகம்மது தம்பி, நபிகளின் நாயகத் தோழர்கள், சென்னை, 1993, பக் 157.

★★T.M. முஹம்மது ஹனீபா, மறை தந்த இறைத்தூதர், பக் 54, 55.

மழைக்காகப் பிரார்த்தனை செய்ய உயர்த்திய கரங்களை கீழே தாழ்த்துவதற்குள்ளாக வானத்திலிருந்து பெருமழை பொழிந்தது.

இதுபோல் மதீனாவில் ஜுமுஆ பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்த போது, தோழர் ஒருவர் மதீனாவின் பஞ்ச நிலை மாற மழைபொழிய வேண்டுமென்று அண்ணலாரிடம் கேட்டார். உடனே அண்ணலார் (ஸல்) இறைவனிடம் இறைஞ்சியதும் பெருமழை பொழிந்தது. அடுத்த வாரத்திற்குள் பெரும் அழிவுநிலைக்கு வந்து விட்டது. உடனே அண்ணலார் (ஸல்) தங்கள் திருக்கரத்தினால் மேகத்தில் எந்தப் பாகத்தில் சுட்டிக் காட்டினார்களோ அது உடனே விலகிக் (கலைந்து) கொண்டிருந்தது. பின் வேறு தேவையான பகுதிகளுக்கும் சென்றது.

இச்சம்பவங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நீர் மண்டலத்தின் மீது இருக்கும் ஆதிக்கத்தைக் காட்டுகின்றது.

காற்று மண்டலம் மீது ஆதிக்கம்

ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு அஹ்ஸாப் போர்க்களத்தில் எதிரிகளின் படை மதீனாமாநகரை சுற்றி முற்றுகையிட்டிருந்தது. அப்போது அண்ணலார் (ஸல்) அறிவித்தார்கள் 'இன்றிரவில் கொடும் புயற் காற்றடிக்கும். அதன் வேகத்தால் மனிதர்கள் தூக்கி எறியப்படுவார்கள்; கூடாரங்கள் பிடுங்கி எறியப்படும்; குதிரைகள் ஒன்றோடொன்று மோதி மடிந்துவிடும் என்றார்கள்' அண்ணலார் (ஸல்) அறிவித்தபடியே அன்றிரவு நடைபெற்றது. எதிரிகள் சின்னா பின்னமாக்கப்பட்டார்கள். திருகுர்ஆனின் 33வது அத்தியாயம் 9வது வசனம் இதற்குச் சான்றாக உள்ளது. இறைவனின் ஆற்றலோடு அண்ணலார் (ஸல்) காற்று மண்டலம் மீது கொண்ட அற்புதத்தினை இது அறிவிக்கிறது.

அண்ணலார் (ஸல்) அவர்களை ஆத்திரத்தில் அடித்தவர் உண்மை உணர்ந்து தமது கரத்தைத் துண்டாக்கிய தனை அறிந்த போது அந்தக் கரத்தை திரும்பவும் எடுத்து தம் உமிழ்நீர் தடவி பொருத்திய அற்புதமும் அண்ணலார் (ஸல்) வாழ்வில் நடந்தது.

பத்ருயுத்தம்

இஸ்லாமிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மாபெரும் போர்க்களம் பத்ரு ஆகும். திருமதினாவிலிருந்து எண்பது மைல் தூரத்தில் ஷாமிற்குச் செல்லும் பாதையில் அமைந்த

அப்பள்ளத்தாக்கில் ஆயிரக்கணக்கில் எதிரிகள் நின்றபோது *313* தோழர்களைக் கொண்டு அதனை எதிர்த்து நின்றி அண்ணலார் கைப்பிடி மண்ணெடுத்து குறைஷிப் படையின் பக்கம் வீசினார்கள். எதிரிகளின் பார்வை மங்கியது. 'நீர் மண்ணை எறிந்த போது அதனை நீர் எறியவில்லை; எங்கிலும் அல்லாஹ்தான் அதனை எறிந்தான்' என்று திருமறை கூறுகிறது. இந்த அற்புதத்தை நிகழ்த்தி அல்லாஹ்வின் துணையோடு போரில் வென்றவர்கள் அண்ணலார் (ஸல்) ஆவார்கள்.

உணவுப் பொருட்கள் பற்றாக்குறையின் போது அதனை தனது பிரார்த்தனையால் பெருக்கிய அற்புதம்★ மரத்தை இடம் விட்டு இடம் மாற்றிய அற்புதம், சூகையான கைகுணம் பெற்ற அற்புதம், வறண்ட கிணற்றில் நீர் பொங்க வைத்த அற்புதம் போன்ற பல அற்புதங்களைச் செய்தவர் அண்ணலார் (ஸல்).

ஜீவ வர்க்கத்தின்மீது ஆதிக்கம்

பேரீத்த மர மட்டையை வாளாயுதமாக்கியதும், காய்ந்த தடியை போர் வாளாக மாற்றியதும், ஓர் மரக்கிளையை ஒளி விளக்காக ஆக்கியதும், அடங்காமல் நின்ற ஒட்டகத்தினை கருணை நபி (ஸல்) கையசைத்து அழைத்ததும் அது அடங்கியதும், (மிர்காத், ஷரஹ் மிஸ்காத்) ஹஸ்ரத் அபூதல் ஹா (ரலி) அவர்களின் அடங்காக் குதிரை அண்ணலார் (ஸல்) சவாரி செய்ததும் அடங்கியதும், (தவாரிக் ஹபீப் இலாஹி) மான் ஐக்கியப்பட்டதும், உடும்பு அண்ணலார் (ஸல்) அவர்களைப் பார்த்து கலிமா சொன்னதும் மொத்த ஜீவவர்க்கங்கள் அண்ணலாருக்கு அடங்கி நடந்தன என்பதற்கு அத்தாட்சியாகும்.

மிஃராஜ்

விண்ணுலகப் பயணம் என்னும் மிஃராஜ் அற்புதத்தினையும் நிகழ்த்திய அண்ணலார் (ஸல்) அவர்களது அற்புதங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் ஆற்றலை அல்லாஹ்வின் சக்தியை, நபி (ஸல்) தங்கள் மூலமாக வெளிப்படுத்தினார்கள் என்று மார்க்க அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

இறுதி நாட்கள்

32 ஆண்டுகளுக்கு முன்னால், (கி.பி.*600*)அபூதாலியின் மனைவியார் ஃபாத்திமா கஅபாவை இடம் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிரசவ வேதனை, கஅபாவின் கதவுகளுக்குப் பின்னால், ஹழ்லரத் அலீ (ரலி)

★ S.S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப், ஸஹிஹீல் புகாரி, *1987*, பக் *720, 721*

பிறந்தார்கள். பிறந்த குழந்தை கண் திறக்கவில்லை, அண்ணலார் (ஸல்) இதனை அறிந்தார்கள்; பின் ஆவலோடு குழந்தையைக் வாங்கிப் பார்த்தார்கள். குழந்தை அண்ணலாரின் அழகுத் திருமுகத்தைக் கண் திறந்து பார்த்தது. அதன்பின் பிறந்த குழந்தையை இதுவரையில் நீராட்ட வில்லையே என்று அறிந்து அண்ணலாரிடம் (ஸல்) 'குழந்தையை நீராட்டுங்கள்' என்றார்கள்.

''இக்குழந்தையை இன்று முதன் முதலாக நான் நீராட்டுகிறேன்; இதே குழந்தை வளர்ந்து பின்னால் என்னை இறுதியாக நீராட்டும்'' என்று அண்ணலார் (ஸல்) கூறினார்கள். அப்போதுஅவர்கள் நபியாக இல்லை. ஆனால் அவர்களின் தீர்க்கதரிசனம் 32 ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியது. ★என்னே! அற்புத ஆற்றல் அண்ணலார் (ஸல்) பன்னிரண்டு அல்லது பதினான்கு நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்து திங்கட்கிழமையன்று இவ்வுலக வாழ்வைத் துறந்தார்கள்.★★ (ஹிஜ்ரி 11 ரபியுல் அவ்வல் 12, கி.பி.632 ஜுன் 8) அவர்களின் புனித உடல் ஹலரத் அலி (ரலி) அவர்களாலேயே நீராட்டப்பட்டது.

முடிவாக

அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டிய அண்ணலார் (ஸல்) அவர்களின் சரித்திரத்தில் சில அற்புதங்களை மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளோம்.

> 'அண்ணலே! யா ரசூலில்லாஹ், ''உங்களைப் புகழக் கருதி
> நாங்கள் வரையும் வாசகங்கள் பலவாறாக இருப்பினும் உங்கள்
> அழகு ஒன்றேயாகும். ஆதலின் உங்களைப் புகழ்ந்து வரையப்படும்
> வாசகங்கள் யாவும் உங்களின் ஒரே அழகைத் தான் சாரும்''

என்ற முதுமொழியும்

> ''முஸ்லிமின் இதயம் முஸ்தபா [ஸல்]வின் உறைவிடம் நம்
> பெருமை யாவும் முஸ்தபா [ஸல்] வின் பெருமையால் வருபவையே!'' ○

என்ற அல்லாமா இக்பாலின் கவிதை வரிகளும் இங்கு நினைவு கூறத் தக்கவையன்றோ!.

★ M.S. முஹம்மது தம்பி, இறுதித் திருநபியின் இறுதி நாட்கள், 1996, பக்.113,115

★★ P.S.K. முஹம்மது இப்ராஹீம், ஷாமாயில் தீர்மதீ, பாகம் 2, 1991, பக்.221.

○ ஆர்.பி.எம். கனி, மகாகவி இக்பால், 1953, பக். 43

நூலாசிரியர் - வரலாற்றாசிரியர்

செ. திவான் M.A., M.Phill., எழுதிய நூல்கள்

1.விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல....
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5. நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர்முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி யின் அழகும் ஆரோக்கியமும் 9.குடை 10. சிந்தனைக்கு
11. வ.உ.சி யின் துன்பத்தின் கற்பனை 12. வ.உ.சி யும் பெரியாரும்
13. வ.உ.சி.யும் தொல்காப்பியமும் 14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி யின் அரசியல் பெருஞ்சொல் 16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள் 18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்! 20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு! 22. குடைப்புரட்சி
23. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும் 24. வாகை சூடி வரும் வைகோ
25. கலைஞரை வென்ற வைகோ 26. வைகோவின் பொன்மொழிகள்
27. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள் 29. வ.உ.சி.யின் நூற்கோவை
30. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும் 31. ஆன்மிகச் சிந்தனை
32. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
33. செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34. கட்டபொம்மனின் கடைசி நாட்கள் 36. வி.ஓ.சி. கண்ட பாரதி
35. இறைநேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம் 38. இறைவனின் திருநாமங்கள்
39. இறுதித்திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40. அயலார் பார்வையில் அண்ணலார் (ஸல்)

விற்பனையில்... கீழ்க்கண்ட இரு நூல்கள் மட்டும்

41. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் (ஆய்வுநூல்) விலை ரூ.120
42. ஆரியப் பாதையில் பசுவதை... (அரிய ஆய்வு நூல்) விலை ரூ.100
தேவைக்கு சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை. முகவரிக்கு M.O. செய்க.

பிரார்த்தனை (துஆ) செய்ய வேண்டுகிறோம்

ராஜா குரூப்ஸ் நிறுவன அதிபர் அண்ணன்

ஜனாப். **P. சுல்தான்** Ex.M.C. அவர்களின்

வாழ்க்கைத் துணைவியார்

மர்ஹூம் **S. கனிபாத்திமா** அவர்களது

மறு உலக நற்பேற்றிற்கும், நல்வாழ்விற்கும் இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவண்

ராஜா ஸ்வீட்ஸ்

ராஜா கட்பீஸ் செண்டர்

ராஜா கட்பீஸ் ஸ்டோர்ஸ்

ராஜா ரெடிமேட்ஸ்

ராஜா பேக்கரி (பாளை)

ராஜா கட்பீஸ் மேட்சிங் செண்டர் (டவுண்)

திருநெல்வேலி.

✆ 331713, 331712

ஹமீது பிரஸ், நெல்லை-6. ✆ 333180